Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 23 திங்கட்கிழமை (07-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 216

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச சபை நூலகம்

# குண்டு தாக்குதலை அடுத்து திருமலை நகர் சுற்றிவளைப்பு

## ஐவர் கைதானதாக தெரிவிப்பு

திருகோணமலை, ஜூலை 7

நேற்று முன்தினம் இரவு திருகோணமலையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தை அடுத்து திருகோணமலை நகர் படையினராலும் பொலீஸாராலும் சுற்றி வளைக்கப்பட்டு கடும் தேடுதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை ஐவர் சந்தேகத்தின் பேரில் கைதாகி இருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரை உட்பட ஐவர் இந்த தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்டது தெரிந்ததே.

சம்பவம் நடந்தவுடன் சாரதா வீதி, வித்தியாலயம் வீதி ஆகிய பகுதிகளில் வீடுகளில் இருந்தவர்கள் ஸ்ரீ சண்முக வித்தியாலயத்துக்கு அழைக்கப்பட்டு சோதனைக்குள்ளாக்கப்பட்டனர். அவர்களின் வீடுகளும் சல்லடை போட்டுத் தேடப்பட்டன.

நேற்றுக் காலையும் நகரின் முக்கிய பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

பிரதான வீதியின் ஒருபகுதியும், நகரப்பகுதியும் உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்பட்ட இத்தேடுதலில் மக்கள் செ.ஜோசப் கல்லூரிக்கு அழைக்கப்பட்டனர். பாதுகாப்பு கடமையில் கடற்படையினரும் நேற்று ஈடுபடுத்தப்பட்டனர்.

(இ-3-150)

## நெற்றியிலும் நெஞ்சிலும் தங்கத்துரைக்குச் சூடு!

திருகோணமலை, ஜூலை 7

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரை துப்பாக்கிச் சூட்டிலேயே இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அவரது நெற்றியிலும், நெஞ்சிலும் துப்பாக்கிச் சன்னங்கள் தாக்கி இருந்தன.

கிரனேட் வீச்சை அடுத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே.

சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் கட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மரண விசாரணை

திருகோணமலை, ஜூலை 7

திருகோணமலை சண்முக வித்தியாலய வாசலில் சனிக்கிழமை இரவு இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இறந்த திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரை உட்பட ஐவரின் மரண விசாரணைகள் நாளை மறுதினம் திருகோணமலை நீதி மன்றத்தில் நடைபெறவிருக்கின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படைத் தலைமையகம் வவுனியாவுக்கு இடம்மாறும்

### போர்முனை அருகே நகர்த்த முடிவு

அனுராதபுரத்தில் இயங்கி வந்த கூட்டுப்படைத் தலைமையகத்தை வவுனியாவுக்கு மாற்றுமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை பணிப்புரை விடுத்துள்ளார்.

அண்மையில் வவுனியா வந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இதற்கான பணிப்புரையை விடுத்தார்.

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பான தளபதி அசோகா ஜெயவர்த்தனாவின் அலுவலகத்தையும் அனுராதபுரத்தில் இருந்து போர் முனைக்கு அண்மையாக உள்ள வவுனியாவுக்கு மாற்றுமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பணித்துள்ளார். இந்த அலுவலகமும் தற்சமயம் வவுனியாவுக்கு மாற்றப்பட்டு வருகிறது (இ-3-150)

### கப்பல் சேவையை மீள ஆரம்பிக்க

## மாற்று ஏற்பாடு குறித்து ஆராயப்பட்டு வருகிறது

திருகோணமலை, ஜூலை 7

''சஜிந்த, தராகி'' கப்பல்களின் கப்டன்கள் கடற்படைப் பாதுகாப்புக் கோரியுள்ளதால் தடைபட்டுள்ள பயணிகள் கப்பல் சேவையை மீள ஆரம்பிக்க, மாற்று நடவடிக்கை குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

இந்த இரு கப்பல்களின் கப்டன்களும் தாம் இனி சேவை நடத்துவதாக இருந்தால் கடற்படை வழித்துணைப் பாதுகாப்பு வேண்டும் என்று கோரி உள்ளனர்.

அப்படி இல்லா விட்டால் ஆயுதம் ஏந்திய கடற்படையினர் கப்பலில் இருந்து பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

அதே சமயம் இந்தக் கப்பல்களின் கப்டன்களை சேவையில் இருந்து நிறுத்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வாகனத்தின் முன் ஆசனத்தில் ஏற முற்பட்டபோதே தாக்குதல் நடந்தது

திருகோணமலை, ஜூலை 7

வித்தியாலயத்தின் பிரதான வாசலில், தங்கத்துரை வாகனத்தின் முன் ஆசனத்தில் ஏற முற்பட்ட சமயம் தாக்குதல் இடம் பெற்றது.

திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரிவு பிரதேச செயலர் வேலும் மயிலும் திருகோணமலை ஸ்ரீசண்முக வித்தியாலய தாக்குதல் சம்பவம் குறித்து விவரிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்டடத்திறப்பு விழாவை யடுத்து இடம் பெற்ற தேநீர் விருந்தில் பங்கு பற்றி விட்டு தங்கத்துரையுடன் வாகனத்தில் செல்ல அவருடன் வந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



எல்லாம் போர் முனைக்கு நகருது ஆனால் போர் தான் நகருதில்லை......!

## புதன் இறுதிச் சடங்கு

திருகோணமலை, ஜூலை 7

குண்டு வெடிப்பில் இறந்த திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரையின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் திருகோணமலையில் இடம் பெறவிருக்கின்றன.

திருகோணமலை தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையினரால் நாளை மறுதினம் காலை அவரின் பூதவுடல் பொறுப்பேற்கப்பட்டு திருகோணமலை நகரசபை மண்டபத்தில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

இறுதி அஞ்சலி உரைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் நிகழ்த்திய பின்னர் மாலை 4-00 மணியளவில் இறுதி ஊர்வலம் ஆரம்பமாகி பூதவுடல் தகனம்செய்யப்படும்.

(இ-3-150)

## திருமலை நகரம் சோகத்தில் கறுப்புக்கொடி, தோரணங்கள்

திருகோணமலை, ஜூலை 7

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரை உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்ட சம்பவத்தையொட்டி திருகோணமலை நகரம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

கறுப்புக் கொடிகள் எங்கும் கட்டப்பட்டுள்ளன; தோரணங்களும் கட்டப்பட்டுள்ளன.

சண்முக வித்தியாலய அதிபர் திருமதி இராஜேஸ்வரி தவபாலசிங்கம், வித்தியாலய அபிவிருத்திச் சங்க உறுப்பினர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ் மொழித்திறன் போட்டி:

## யாழ். மாவட்டத்துக்கு இரண்டு முதல் இடங்கள்

கொழும்பு, ஜூலை 7

கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலயத்தில்நேற்று நடந்த அகில இலங்கை தமிழ் மொழித்திறன் போட்டிகளில் யாழ். மாவட்டத்துக்கு இரு முதலிடங்கள் கிடைத்தன.

மாகாணப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள் இப் போட்டியில் பங்கு பற்றினர்.

அகில இலங்கையிலும் இருந்து ஏராளமான மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றினர்.

கொழும்பு சென்றுள்ள வலயம் ஒன்றின் பணிப்பாளர் எஸ். இரத்தினராசா, வலயம் இரண்டின் பணிப்பாளர் எஸ். சிவராசா ஆகியோரும் இப் போட்டிகளைப் பார்வையிட்டனர்.

யாழ். மாவட்டத்திலிருந்து 5 போட்டிகளில் மாணவர்கள் பங்கு பற்றினர்.

பிரிவு 5 இல் நாடகப் பிரதி ஆக்கப் போட்டியில்— ம. பிரவீணன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) முதலாம் இடத்தைப் பெற்றார்.

தமிழ் மொழித்திறன் வினா விடைத் திறந்த போட்டியில் கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றது.

பிரிவு ஒன்றில் வாசித்தல் போட்டியில் ம. லோகபரனி (தெல்லிப்பழை மகாஜன)

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 'வெற்றி உறுதி' படை மீது புலிகள் மற்றொரு தாக்குதலுக்கு முஸ்தீபு!

### படையினா தயார் நிலையில் என தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

''வெற்றி உறுதி'' இராணுவ [illegible] னர் மீது மூன்றாவது தாக்குதல் ஒன்றை நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருவதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார ஏடு தகவல் வெளியிட்டுள்ளது.

ஓமந்தை ஊடாக முன்னேறிய 55 ஆவது படையணியின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு விழா

உரும்பராய் கிழக்கு புனித மிக்கேல் சனசமூக நிலையப் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த புதன்கிழமை டா. அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

கோப்பாய் பிரதேசச் செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ஆ. கதிரமலைநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (ஐ-154)

# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதம் அருந்தவநாதன்

அச்சுவேலி தெற்கு பயித்தோலையைச் சேர்ந்த வேலாயுதம் அருந்தவநாதன் 3-7-97 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 7-7-97 நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வல்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
வ. சின்னத்தம்பி
(மைத்துனர்)

பயித்தோலை,
அச்சுவேலி தெற்கு,
(48255)

## தம்பையா சிவசாமி

11/5, செம்மணி வீதி, நல்லூரைச் சேர்ந்த தம்பையா சிவசாமி 06 - 07 - 97 இல் காலமானார்.

அன்னார் பிள்ளைஅம்மாவின் அன்புக் கணவரும், தம்பையா செல்லம் தம்பதிகளின் மூத்த புதல்வனும், இராசையா, துரைச்சாமி (கனடா), தம்பிராசா (கொழும்பு), இராசதுரை (லண்டன்), சிவராசா (பிரான்ஸ்), சர்வானந்தன், அன்னலட்சுமி (கொழும்பு), தர்மபூபதி (சிங்கப்பூர்), மங்கயர்செல்வி (பிரான்ஸ்), மங்கையர்க்கரசி(திருமலை) ஆகியோரின் சகோதரரும், சரோஜா (திருமலை), வனஜா (பிரான்ஸ்), விஜயன், ரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வநாயகம் (திருமலை), நிர்மலா, ரவீந்திரன் (பிரான்ஸ்), சித்திரா ஆகியோரின் மாமனாரும், ரோகினி (லண்டன்), பாமா (பிரான்ஸ்), தயா (ஜேர்மனி), தக்ஷா, கௌதமன் (பிரான்ஸ்), துவாரகன (பிரான்ஸ்), வித்தியா, விநோதன், கௌதீஸ்வரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (7-7-97) திங்கள் காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. ரஞ்சன்
(மகன்)

11/5, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(48260)

## டாக்டர் மு. சச்சிதானந்தம்

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வேதராணியார்வளவு உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் மு. சச்சிதானந்தம் 4-7-97 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு, திருமதி முருகேசபிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற திரு, திருமதி சின்னத்தம்பி தம்பதிகளின் அன்பு மருமகனும், தர்மேஸ்வரியின் அன்புக் கணவரும், கௌரி (நோர்வே), சக்திக்குமார் (கனடா) சுபத்திரா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலகுமார், தர்மினி, விஜயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், நீரஜா, தனுஜன், பிரேமிதா, நர்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற திருமதி நாகரத்தினம் இராமலிங்கம், ஒப்பிலாமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஜெகநாதன், இராமகிருஷ்ணன், விநாயகமூர்த்தி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 9-7-97 புதன்கிழமை அன்று கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு.ஒப்பிலாமணி
(சகோதரர்)

556, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(48262)

## திருமதி
## கதிரித்தம்பி முத்துப்பிள்ளை

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த கதிரித்தம்பி முத்துப்பிள்ளை 06- 07- 1997 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பியின் அன்பு மனைவியும் மற்றும் முருகையா, சின்னராசா, சிவக்கொழுந்து, தில்லையம்பலம், வேலும்மயிலும்(இளைப்பாறிய கி. சே. அலுவலர்), வீரசிங்கம் (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்), துரைராசா, தம்பையா, சுந்தரலிங்கம், பத்மராணி ஆகியோரின் அருமைத் தாயாரும், செல்லாச்சி, சிவபாக்கியம், காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் வள்ளிப்பிள்ளை, மங்களேஸ்வரி, மீனாட்சி, கனகம்மா. காலஞ்சென்ற கண்ணம்மா மற்றும் கிரிசாம்பாள், இரத்தினசிங்கம் (யா/அருணோதயாக் கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7- 7- 97) திங்கட்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சி. இரத்தினசிங்கம்
(மருமகன்)

க. துரைராசா
முருங்கைப்புலம் (செம்பாடு),
அளவெட்டி.
(47313)

# மிதிவெடி சம்பவங்களில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

கொக்குவில், ஏழாலைப் பகுதிகளில் நேற்று இடம்பெற்ற மிதி வெடிச் சம்பவங்களில் மூவர் படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவர் காலை இழந்தார்.

கொக்குவில் பிறவுண் வீதிப் பகுதியில் நேற்று பகல் 12.45 மணிக்கு இடம்பெற்ற மிதி வெடிச் சம்பவத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த தில்லை நடராசா ஜெயரட்ணம் (வயது-41)என்பவரின் இடது கால் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டது. வலது கால் பாதம் சிதறுண்ட நிலையில் உள்ளது. இச் சம்பவத்தில் இவரது நண்பரான கொக்குவில் பிறவுண் வீதியைச் சேர்ந்த கிருஷ்ண பிள்ளை தேவராசா (வயது 41) என்பவர் காயமடைந்தார்.

இருவரும் வியாபார விடயமாகக் கதைத்து விட்டு திரும்பிக் கொண்டிருந்த வேளை களையாறுவதற்காக அருகில் இருந்த மரநிழலை நாடிய போது மிதி வெடியில் சிக்குண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏழாலையில் நேற்றுக் காலை மாடு கட்டச் சென்ற ஒருவர் அந்த மாடு மிதி வெடியில் சிக்கியதால் காயம் அடைந்தார். மாட்டின் இடது முன்னங்கால் துண்டிக்கப்பட்டது.

குமாரசாமி குமாரகுலசிங்கம் (வயது 45) என்பவரே இச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்த மூவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

# குருபூசை தினம்

வலி. தெற்கு, ஜூலை 7

தவத்திரு வடிவேல் சுவாமிகளின் ஏழாவது குருபூசை தினம் இன்று திங்கட்கிழமை காலையில் உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் கொண்டாடப்படும். (ஐ-152)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் ஜூலை 7

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வெள்ளியன்று ஆரம்பமானது. தொடர்ந்து 18 நாள்கள் உற்சவம் நடைபெற்று எதிர்வரும் 20 ஆம் திகதி வேல்பவனி இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

வட்டுக்கோட்டை காசி விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர் ஆலய தேர்த் திருவிழா எதிர்வரும் புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் காலை தீர்த்தோற்சவம் இடம் பெறும். (ஐ-90)

★ ★ ★

வட்டுக்கோட்டை எபநேசர் ஜெப ஆலயப் பிரதிஷ்டை ஆராதனை இன்று காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளது. (ஐ-90)

★ ★ ★

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய பங்கைச் சேர்ந்த அருட்திரு வெ. ஜெறோம், அருட்திரு சூ. அல்றின் ஆகிய இருவரினதும் கூட்டு முதற்திருப்பலி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு ஆலயத்தில், ஆலய பங்குத்தந்தை அருட்திரு ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெறும். (இ-15)

★ ★ ★

சாவகச்சேரி அல்லாரை [illegible] ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறும். (ஐ-117)

உ

பொன்னாலை

## ஸ்ரீவரதராஜப்பெருமாள்தேவஸ்தான அந்தரீத சம்புரோக்ஷண கும்பாபிஷேகம்

ஆனித்திங்கள் 23 ஆம் நாள் (7-7-97) திங்கட்கிழமை:

பகல் 12 மணி- அனுக்ஞை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ் சாந்தி.

மாலை 3 மணி-மிருத் சங்கிரகணம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், கும்பஸ்தாபனம், யாக பூஜை ஹோமம்.

ஆனித்திங்கள் 24ஆம்நாள்(8-7-97)செவ்வாய்க்கிழமை

காலை 9 மணி - யாக பூஜை, ஹோமம்.

மாலை - யாக பூஜை, திரவிய ஹோமம், பூர்வ சந்தானம்.

ஆனித்திங்கள் 25 ஆம் நாள் (9-7-97) புதன்கிழமை:

காலை 7 மணி- யாக பூஜை, ஹோமம், பச்சிய சந்தானம், தீபாராதனை.

8 45 மணி - அந்தரீத சம்புரோக்ஷண கும்பாபிஷேகம், பூஜை, உற்சவம்.

கும்பாபிஷேக குரு:- 'சிவாகம கிரியா தத்துவநிதி'

சிவப்பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்தக்குருக்கள்
(மட்டுவில்)

குறிப்பு: 9- 7- 97 முதல் மாலை 5 மணி வரை பூசைகள் நடைபெறும்.

- தேவஸ்தான பரிபாலன சபை.

(48259)

உ

கரவெட்டி கிழக்கு அருள்மிகு

## ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய உற்சவமூர்த்தி பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

நிகழும் ஈசுர வருடம் ஆனித்திங்கள் 27 ஆம் நாள் (11-07-1997) வெள்ளிக்கிழமை காலை 9-01—9-45 வரையுமுள்ள உத்தரநட்சத்திரமும் ஷஷ்டித்திதியும் கூடிய சுபவேளையில் விநாயகப்பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறத்திருவருள் பாலித்துள்ளது. எம் பெருமானின் பக்த அடியார்கள் அனைவரும் வந்து விநாயகரைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்:
பிரதம குருக்கள்
தில்லையம்பலப் பிள்ளையார்
தேவஸ்தானம்.

(47310)

## மருந்து விநியோகம்

S. P. C யின் ஒரு தொகுதி மருந்து கிடைக்கப் பெற்று விநியோகிக்கப்படுகின்றது. வைத்தியர்கள், வைத்தியசாலைகள், மருந்தகங்கள் அனைவரும் கொள்வனவு செய்யலாம் என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்.

குறிப்பு:- S. P. C யின் யாழ். குடாநாட்டு விநியோகத்தவர் S. P. J ஆகும். S. P. C யின் கொழும்பு மொத்த விலையிலிருந்து 5% மட்டுமே வைத்து விற்பனை மேற்கொள்கின்றோம்.

**S. P. J. Ltd**
**230, K. K, S. ROAD, JAFFNA.**

(சி/1086)

## பாராட்டுகின்றோம்

## யா/ வட இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை.

வடக்கு — கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் 19 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் எமது கல்லூரி மாணவிகள் மாகாண சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த மாணவிகளின் சாதனை இன்றைய கால கட்டத்தில் பாடசாலைக்கு மிகவும் பயனுறுதி வாய்ந்தது.

இதில் சம்பந்தப்பட்ட

**மாணவிகள், அதிபர், பயிற்சி ஆசிரியர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள்**

மற்றும்
உதவி புரிந்த அனைவருக்கும்
எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்னும் பல கீர்த்திகளையும் பாடசாலை பெற்று சிறப்புற தொப்புளாவத்தை இவரவரை வேண்டுதல் செய்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/ வட இந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.

(48257)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொம்பென்னில் கடும் சண்டை!

## ஊரடங்கு அமுல்

நொம்பென், ஜூலை 7

கம்போடியத் தலைநகர் நொம்பென்னுக்கு அருகே இரு பிரதமர்களுக்கும் ஆதரவான படையினருக்கும் இடையே கடும் சண்டை நீடிப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தலைநகர் நொம்பெனில் ஊரடங்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அங்குள்ள சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டிருக்கிறது. நொம்பென்னுக்கான விமானசேவைகளை வெளிநாட்டு நிறுவனங்கள் ரத்துச் செய்துள்ளன.

நொம்பென் நகரின் மத்திய பகுதியில் முதலாவது பிரதமர் இளவரசர் நொரடோம் ரணரித்துக்கு ஆதரவான படைத்தளபதிகளும், அதிகாரிகளும் வசிக்கின்ற பாதுகாப்பு வளாகத்தை ஒட்டிய பகுதியில் சண்டை நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

நகரில் ஊரடங்கு அமுலில் இருப்பதால் சண்டை தொடர்பான இழப்புகள் குறித்த தகவல்களைப் பெற முடியாத நிலை இருப்பதாக அறிவிக்கப்பட்டது. (ஐ-4)

# தானே தலைவர் என்கிறார் ரணரித்!

## பிரான்ஸில் இருந்து அவர் அறிக்கை

பாரிஸ், ஜூலை 7

கம்போடியாவில் ஆட்சியைக் கைப்பற்ற இரண்டாவது பிரதமர் ஹுன்சென் சதி செய்கிறார் என முதலாவது பிரதமர் நொரடோம் ரணரித் தெரிவித்துள்ளார்.

கம்போடியாவின் ஒரேயொரு தலைவர் தானே என்றும் அவர் பிரகடனம் செய்துள்ளார்.

இளவரசர் ரணரித் பாரிஸில் இருந்து விடுத்த ஓர் அறிக்கையில் இவ்வாறு கூறியுள்ளதாக செய்தி ஏஜென்ஸிகள் குறிப்பிட்டன.

தமது ஆட்சியைக் கவிழ்க்க பிரதமர் ஹுன்சென் முயற்சிப்பதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கம்போடிய மக்கள் கட்சியின் தலைவரும் இரண்டாவது பிரதமருமான ஹுன்சென் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார்.

இதேவேளை —

இரண்டாவது பிரதமர் ஹுன்சென் தற்போது வியட்நாமில் தங்கியுள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

## ஏவுகணைத் தயாரிப்புக்கு

# சீனா உதவுவதாக வெளியான செய்திக்கு பாகிஸ்தான் மறுப்பு!

இஸ்லாமாபாத், ஜூலை 7

இஸ்லாமாபாத்துக்கு அருகே ராவல்பிண்டியில் ஏவுகணை நிலையம் ஒன்றை அமெரிக்க மத்திய உளவு நிலையம் கண்டுபிடித்துள்ளது என்றும்—

அந்த ஏவுகணை நிலையத்தில் சீனாவின் எம் - 11 ஏவுகணைகளைத் தயாரிக்க முடியும் என்று 'ரைம்ஸ்' சஞ்சிகையில் கடந்த ஜூன் 30 ஆம் திகதி வெளியான அறிக்கைகளை பாகிஸ்தான் வெளியுறவுப் பேச்சாளர் மறுத்துள்ளார்.

சீனா பாகிஸ்தானுக்கு ஏவுகணைகளை விற்பது மட்டுமன்றி அவற்றைத் தயாரிப்பதற்கும் உதவி அளித்து வருவதாக 'ரைம்ஸ்' சஞ்சிகை அமெரிக்க உளவு நிலையத் தகவல்களை மேற்கோள் காட்டி தெரிவித்திருந்தது.

உலக அரங்கில்

பாகிஸ்தான் ஏவுகணைகளைத் தயாரிப்பதற்கு சீனா பெருமளவில் உதவி வருவதாக 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை வெளியிட்ட மற்றொரு தகவலையும் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மறுத்தார். (ஐ)

# தேர்தலுக்குத் தயாராகுமாறு கேசரி கூறியதாகத் தகவல்

புதிய பொதுத் தேர்தலுக்குத் தயாராகும்படி காங்கிரஸ் கட்சியின் தலைவர் சீதாராம் கேசரி கட்சித் தொண்டர்களிடம் தெரிவித்துள்ளார் என்று 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' செய்தி வெளியிட்டிருக்கிறது.

நாடு நெருக்கடி நிலையில் சிக்கியிருக்கிறது. இக்கட்டத்தில் காங்கிரஸ் கட்சியினால் மட்டுமே நாட்டுக்கு உறுதியான தலைமைத்துவத்தை வழங்க முடியும் என்று கேசரி கூறியதாக 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' மேலும் தெரிவித்துள்ளது.

# சோஷலிச அணியின் வெற்றி உறுதி

ரிறானா ஜூலை 7

அல்பேனிய பொதுத்தேர்தலில் முன்னாள் கம்யூனிஸ்ட்டுக்களின் சோஷலிசக் கூட்டணிக் கட்சி வெற்றிபெற்றதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் 155 இடங்களில் 42 இடங்களைத் தவிர மற்றைய இடங்களுக்கு முடிவுகள் அறிவிக்கப்பட்டு விட்டன.

இதில் சோஷலிசக் கட்சிக்கு 80 இடங்கள் கிடைத்திருப்பதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது. அக்கட்சி மேலும் அதிக இடங்களுடன் பெரும்பான்மையைப் பெற்றுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதிபர் சாளி பெரிஷாவின் ஜனநாயகக் கட்சிக்கு சுமார் 20 இடங்கள் மட்டுமே கிடைத்தன. (ஐ 5)

# செவ்வாயில் இறங்கிய விண்கலம் படங்களை உடன் அனுப்பியது

## புதிய சகாப்தத்தின் தொடக்கம் என்கிறார் கிளின்ரன்

கலிபோர்னியா, ஜூலை 7

செவ்வாய்க்கிரகத்தில் கடந்த வெள்ளியன்று இரவு வெற்றிகரமாகத் தரை இறங்கிய பாத் பைன்டர் என்ற அமெரிக்க விண்கலம் உடனடியாகவே அங்கிருந்து அரிய படப் பிரதிகளை அனுப்பத் தொடங்கியுள்ளது.

முதலில் கிடைத்த ஒரு டசினுக்கு மேற்பட்ட படங்கள் செவ்வாய்க் கிரகத்தின் பாறைகள் நிறைந்த தரைப் பகுதியை புலப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று பகுதிகளைக் கொண்ட இந்த விண்கலத்தில் 'மார்ஸ் ரோபர்' என்ற ரோபோ வாகனப் பகுதி பிரதான விண்கலத்தில் இருந்து பிரிந்து செவ்வாய்த் தரை மீது ஊர்ந்து செல்லத் தொடங்கியதும் மேலும் அரிய பல தகவல்கள் பூமிக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கலிபோர்னியா மாநிலத்தின் பசடோன் நகரில் உள்ள தரைக் கட்டுப்பாட்டு நிலையத்தில் இருந்து தொலை தூரத் தன்னியக்க கட்டுப்பாட்டுக் கருவிகள் மூலம் இயக்கப்படும் இந்த ஆள்கள் இல்லாத விண்கலம் செவ்வாயில் தரையிறங்கிய வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியின் புதிய சகாப்தத்தின் தொடக்கம் என்று அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் வர்ணித்துள்ளார்.

செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்கள் செல்வதற்கான முன்னோடியாக இந்த விண்வெளி நிகழ்வு அமைகிறது. (ஐ-5)

# கணனித் தொடர்பு சீர் செய்யப்பட்டது

கலிபோர்னியா, ஜூலை 7

செவ்வாய்க் கோளில் தரையிறங்கி உள்ள ஆளில்லாத அமெரிக்க விண்வெளிக்கலமான ''பாத்பைன்டரு''க்கும் அதன் நில ஆய்வு ரோபோ ஊர்திக்கும் இடையே தடைப்பட்டிருந்த கணனித் தொடர்பு மீண்டும் சீர்ப்படுத்தப்பட்டு விட்டது 12 மணி நேர முயற்சிக்குப் பின்னர் விஞ்ஞானிகள் அதனை வெற்றிகரமாகச் சீர் செய்தனர்.

இனி இந்த ரோபோ ஊர்தி செவ்வாய்க் கோளின் நிலத்தில் ஊர்ந்துசென்று சோதனையில் ஈடுபட முடியும் என்று பஸிடேனாவில் விண்வெளி விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இந்த ஊர்தி ''பாத்பைன்டர்'' என்ற விண்கலத்திலிருந்து வெளியேறிச் சென்று செவ்வாய்க்கோளின் நிலப்பரப்பின் பாறைகளையும் மண்ணையும் ஆராயும் அதற்கு வேண்டிய மின்னியற் செய்கைகளை பஸிடேனாவிலிருந்து விஞ்ஞானிகள் அனுப்புவார்கள். (ஐ-5)

## பாதுகாப்பை குறைக்க முடிவு

புதுடில்லி, ஜூலை 7

அரசாங்க அதிகாரிகளுக்கும், முக்கிய அரசியல் பிரமுகர்களுக்கும் வழங்கப்படும் பாதுகாப்பு காரணமாக பொதுமக்கள் பலர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதால் அத்தகைய பாதுகாப்பை குறைக்க இந்திய அரசு முன்வந்துள்ளது.

பிரமுகர்களுக்கு அளிக்கப்படும் இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகளால் விமானநிலையங்களும், முக்கிய வீதிகளும் அடிக்கடி மூடப்படுகின்றன. (ஐ)

# லாலுவின் தலைமையில் தேசிய ஜனதா தள் கட்சி!

## குஜ்ராலின் அரசுக்கு ஆதரவு

புதுடில்லி, ஜூலை 7


இந்தியாவின் தேசிய அரசியல் கட்சிகளில் ஒன்றான ஜனதா தள் கட்சி இரண்டாகப் பிளவுபட்டு விட்டது.

ராஷ்டிரிய ஜனதா தள் கட்சி (தேசிய ஜனதா தள் கட்சி) என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை ஜனதா தள்ளின் முன்னாள் தலைவர் லாலுபிரசாத் யாதவ் அமைத்துள்ளார்.

ஜனதா தள் கட்சியில் இருந்து தனியாகப் பிரிந்து சென்ற அணியினர் புதுடில்லியில் நேற்று முன்தினம் கூடி இப்புதிய கட்சியை அமைத்தனர்.

பிரதமர் குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் மிகப் பெரிய கட்சியான ஜனதா தள் கட்சியின் மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 45 பேரில் 15 பேர் லாலுபிரசாத் யாதவ் தலைமையிலான புதிய கட்சியில் இடம்பெற்றுள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள தேசிய ஜனதா தள் கட்சிக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தனி இடம் ஒதுக்கித் தருமாறு கட்சியின் எம் பீக்கள் சபா



நாயகர்களிடம் நேரில் சென்று கேட்டுள்ளனர்.

தமது புதிய கட்சி குஜ்ரால் தலைமையிலான ஐக்கியமுன்னணி அரசில் தொடர்ந்து அங்கம் வகிக்கும் என்றும்—

பிரதமர் குஜ்ராலை தொடர்ந்து அது ஆதரிக்கும் என்றும் கட்சியின் தலைவரும் பீஹார் மாநில முதலமைச்சருமான லாலுபிரசாத் யாதவ் தெரிவித்துள்ளார்.

பலகோடி டொலர் பெறுமதியான கால்நடைத் தீவன ஊழல் விவகாரத்தில் முதல்வர் லாலுபிரசாத் யாதவ் சிக்கியதை அடுத்து ஜனதா தள் கட்சிக்குள் லாலுவை ஆதரிப்போர், எதிர்ப்போர் என இரண்டு அணிகள் உருவாகியிருந்தமை தெரிந்ததே.

ஊழல் விவகாரத்தில் சீ. பி. ஐயினால் குற்றம் சாட்டப்பட்டுள்ள முதல்வர் லாலு பதவி விலக மறுத்து வருகிறார்.

இதேவேளை—

ஜனதா தள் கட்சியின் தலைவரைத் தெரிவு செய்வதற்காக கடந்த புதனன்று நடந்த தேர்தலின் வாக்குகளை எண்ணும்பணி நேற்று முடிவடைய இருந்தது.

ஜனதா தள் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட சரத் யாதவ் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-4-5)

# திரைப்படத் தயாரிப்பாளர்கள் மீது தொழிலாளர் கும்பல் தாக்குதல்!

## பாரதிராஜாவின் கார் அடித்து நொறுக்கப்பட்டது

சென்னை ஜூலை 7

தென்னிந்திய தமிழ்திரைப்பட இயக்குனர்கள், படப்பிடிப்பாளர்கள் நேற்று முன்தினம் சென்னையில் நடத்திய கூட்டத்தில் பெரும் கலவரம் ஏற்பட்டது.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திரைப் படத் துறைத் தொழிலாளர் கள் [illegible]டும் ஒரு கும்பல் கூட்டத்திற்குள் திடீரென நுழைந்து தயாரிப்பாளர்கள், படப்பிடிப்பாளர்கள் மீது தாக்குதல் நடத்தியது.

கும்பலைத் தடுக்க முயன்ற பொலீஸார் மூவர் தாக்கப்பட்டனர். பிரபல திரைப்பட இயக்குனர் பாரதிராஜாவின் கார் அடித்து நொறுக்கப்பட்டது.

தமிழ்த் துரைப்பட இயக்குனர்கள் சங்கம், தமிழ்திரைப்படத் தொழிலாளர்கள் கூட்டமைப்பு என்பவற்றை புதிதாக அமைப்பது தொடர்பாக கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த சமயமேஇத் தாக்குதல் நடத்தப்பட்டது.

பின்னர் இந்த தாக்குதலைக் கண்டித்தும் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும் பாரதிராஜா, கே. பாலச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ மு
# சித்திரத் தேர் வெள்ளோட்

07 - 07 - 97



உற்சவ மூர்த்தியின் திருஉருவம்

### ஒப்பில்லாத் தேர்

தேரமைப்புக் கேற்றபடி தேவிமுற்றத் தேயிருந்து
சீரமைத்துச் சீவரத்னச் சிற்பிசெய்த—நேரமைப்புத்
தேரெல்லாந் தேர்ந்தது போற் தேவிமுத்து மாரியவள்
தேரெதற்கு மொப்பில்லாத் தேர்.

- ச. தங்கமாமயிலோன்

## கலைஞர்களைப் போற்றும் த
## வெளிப்படுத்துவனவே வெள்

திருநெல்வேலி அருள் மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் சித்திரதேர் வெள்ளோட்ட விழா இன்று திங்கட்கிழமை அதிசிறப்பாக நடைபெறுகின்றது.

திருநெல்வேலிக் கிராமத்திலே சைவாலயங்கள் பல வுள. சைவமும் தமிழும் தழைத்து வளர்ந்த மண் திருநெல்வேலி மண். ஈழத்திலே சைவமும் தமிழும் நிலைத்துவாழ அரும்பணி யாற்றிய ஆறுமுகநாவலரின் மூதாதையரான ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் பசுவதைக்கு அஞ்சிப் பரதேசம் போனவர். ஞானப்பிரகாச சுவாமிகள் இவர் சிவஞான சித்தியாருக்கு உரை கண்டவர். மட்டுவிலிலே பிறந்து திருநெல்வேலியைத் தமது வாழ்விடமாக வரித்துக் கொண்டு மரணபரியந்தம் இம் மண்ணிலே வாழ்ந்து தமிழ்ப்பணியாற்றியவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலை வைத்திலிங்கச் செட்டியார் நிர்மாணிக்க உந்துசக்தியாய் இருந்தவரும் ஈழத்து தமிழ்க் கல்வி மரபின் ஊற்றுக் காலாக அமைந்தவருமான கூழங்கைத் தம்பிரான் எனும் கனகசபாதி யோகி சமாதிவைக்கப்பட்டதும் திருநெல்வேலியிலே என்பர்.

புகழ்பெற்ற, தொன்மை வாய்ந்த சைவ ஆலயங்கள் பலவற்றோடு, சைவவித்தியா விருத்திச்சங்கம், சைவாசிரிய கலாசாலை, உயர்தரகல்லூரிகள் முதலான கல்விநிறுவனங்களையும் (இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தையும்) தன்னகத்தே கொண்டு திருநெல்வேலி திகழுகின்றது.

உலகம் போற்றும் கல்வியாளர்கள், பாரம்பரிய கைவினைக் கலைஞர்கள், மரபுவழி வைத்தியர்கள் என்ற இன்னபிற பெருமக்களையும் தன்னகத்தே கொண்டுமிளிரும் திருநெல்வேலியிலே அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் எழுந்தருளி இருந்து திருவருள் பாலிக்கின்றார்.

**மண்வளமும் மனவளமும்**

திருநெல்வேலியின் மண்வளமும் இங்கு வாழும் மக்களின் மனவளமும் இவ்வாலய
தின் வளர்ச்சிக்கும் பெரு
பங்களிப்பாகும்.

புகழ்பூத்த திருநெல்வேலி
சிவன் கோயிலுக்கு இட
புறமாக முத்துமாரியம்ம
ஆலயம் அமைந்திருப்பது
இதன் அருட்சிறப்புக்கு
காரணம் எனலாம்.

அடியார்கள் வேண்டியவை
வேண்டியாங்கு விரைந்
வழங்கும் முத்துமாரி அம்ப
ளின் பணிகளிலே அர்ப்பணி
போடு ஈடுபட்டுழைக்கு
குருக்கள் குடும்பத்தினரி
குன்றா உழைப்பும் குறைய
ஊக்கமும் இவ்வாலயத்தி
வளர்ச்சிக்கு முக்கிய கா
ணிகளெனலாம்.

அற்புதமான திருப்பன
வேலைகள், அழகான சிற்
வேலைப்பாடுகள், வனப்
மிக்க ஓவியங்கள் இவ
றோடு புனிதமும் கலந்
பக்திச் சூழலை ஏற்படுத்து
வண்ணம் இவ்வாலயத்தை
பரிபாலித்து வருகின்றனர்



ஆலய முன்னாள் ஆதீன கர்த்தாவும் பிரதமகுருவுமான
சிவாகம கிரியாபூஷணம் சிவஸ்ரீ க சிவலோகநாதக் குருக்கள்

**கலாநிதி எஸ்**
(தமிழ்த்துறை, யாழ்

நியமம் தவறாத பூ
நடைமுறைகள், அபிஷே
ஆராதனைகள், வைகாசிவிச
கப் பொங்கல், மாசிம
இலட்சார்ச்சனை, சித்திர
பௌர்ணமித் திருவிளக்கு
பூசைகள், விழாக்கள் எ
இன்னபிற பலவற்றைப் பக்
யுணர்வோடு, அடியார்க
ஈர்க்கும் வண்ணம் ஆற்ற
இவ்வாலயக் குருக்கள்
ரர் க. சிவலோகநாதக் கு
களும் அதே பணியை அ
தம் புத்திரர்களும் ஆற்
வரும் பணி விதந்து பாரா
டத் தக்கது.

யாழ்ப்பாணத்துச் சைவா
யங்கள் பல முன்மாதிரி
கக் கொள்ளக் கூடியதா
இவ்வாலயத்தின் செயற்பா
கள் அமைந்துள்ளன. சை
நற்திருவும் வைதிகப் பொ
வும் கொண்ட மதிப்பு
சிவலோகநாதக் குருக்களி
வழித் தோன்றல்களை ம
திறந்து பாராட்ட வேண்டு

ஸ்ரீமுத்துமாரி அம்பாளுக்
மிகநேர்த்தியான அழகி
வேலைப்பாடுகள் அமை

## நல்லை ஆதீனமுதல்வர் அருளாசி

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அருள் மிகு முத்துமாரி அம்பாளுக்கு அழகியதொரு சித்திரத்தேர் அமைத்து இன்று வெள்ளோட்ட விழா நடை பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

யாழ்ப்பாணத்துக்கு பெருமையைத் தேடித் தருவது ஆலயங்கள். அவ்வகையில் ஆலயங்களில் நடைபெறும் விழாக்கள் மனிதனை மனிதனாக வாழவைப்பதற்கு உதவுகின்றன. மனிதனுடைய அறியாமையை நீக்கி மெய்ஞ்ஞானம் என்னும் ஒளியைத் தருவது இத்தேராகும். தேரினுடைய கீழ்ப்பாகம் முழுவதும் உலகத்தில் உள்ள அனைத்து நிகழ்ச்சிகளையும் காட்டக் கூடியதாக உள்ளது. மேல்ப்பாகம் வெளியாக உள்ளது, இறைவன் எழுந்தருளியிருந்து ஆன்மாக்களை ஆட்கொள்ளுகின்றான்.

நீண்ட காலமாக திருநெல்வேலிமுத்துமாரி அம்மன் கோயிலுக்கு இரதம் இல்லாது இருந்த குறையை நிவர்த்தி செய்யும் வகையாக திருநெல்வேலி சிற்பகலாநிதி திரு. ஆறுமுகம் ஜீவரட்ணம் அவர்களால் 9கோணங்களைக் கொண்ட தேர் அமைக்கப்பட்டிருப்பது எங்கள் நாட்டு சிற்பக்கலைக்கு முத்திரை பதிப்பதாக அமைந்துள்ளது.

கலைஞர்களுடைய திறமைமேலோங்கி வளர்வதற்கு அடக்கமும், பணிவும் தெய்வ நம்பிக்கையும் மிகவும் இன்றியமையாதனவாகும். ஸ்தபதி ஜீவரட்ணம் அவர்கள் நீண்ட காலம் வாழ ஆசிகள்.

இத்திருப்பணிக்கு உதவி செய்த அன்பர்கள் ஆலய பரிபாலன சபையினர் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் வேண்டும் இன்ப அன்பு
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்**
குருமகா சந்நிதானம்,
திருஞானசம்பந்தர் ஆதீனம்,

## இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

கலையும், அழகும், தூய்மையும், அருள்ப்பார்வையும் இலங்கிட நற்குருமார்களால் நடத்தப்படுவது திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலயம்

அவ்வாலயத்திற்கு சிற்பகலாநிதி ஜீவரட்ணம் அவர்களால் உருவாக்கப்பட்ட அழகிய சித்திரத் தேர்களிரண்டு இன்று வெள்ளோட்டம் விடப்படுவது பூர்வீக புண்ணிய பலனாகும். இந்நாளில் இன்பமே சூழ்ந்து எல்லோரும் வாழப் பிரார்த்திக்கின்றேன்

சுபம்

சி. சபாநாதன்
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

## சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா

**V. S. B. GROUP**
266A, STANLEY ROAD, JAFFNA.

**யோ. சிவரஞ்சன் பலசரக்கு வாணிபம்**
45, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**ஜெசிபா ஏஜென்சி**
132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**மகாநதி ரெ**
4, நவீன சந்தை,


**மகாலட்சுமி கள**
138, ஸ்ரான்லி வீதி,

**லிங்கம் சில்க்**
18, நவீன சந்தை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ீ முத்துமாரி அம்பாள் ஆலய
# ாட்ட விழாச் சிறப்புமலர்

07 - 97



# ம் தமிழர் மரபினை
# வெள்ளோட்ட விழா

ம் இவ்வாலயத்
ச்சிக்கும் பெரும்
ரகும்.
த திருநெல்வேலிச்
ாயிலுக்கு இடது
முத்துமாரியம்மன்
அமைந்திருப்பதும்
அருட்சிறப்புக்குக்
னலாம்.
கள் வேண்டியதை
ங்கு விரைந்து
முத்துமாரி அம்பா
ளிலே அர்ப்பணிப்
ஈடுபட்டுழைக்கும்
குடும்பத்தினரின்
ழைப்பும் குறையா
இவ்வாலயத்தின்
5 முக்கிய கார
லாம்.
ான திருப்பணி
, அழகான சிற்ப
ட்டுகள், வனப்பு
வியங்கள் இவற்
னிதமும் கலந்து
லை ஏற்படுத்தும்
இவ்வாலயத்தைப்
வருகின்றனர்.

சித்திரத் தேரினை நிர்மாணிக்கும் பொழுது பரிவார மூர்த்தியாகிய விநாயகப் பெருமானுக்கும் அற்புதமான சித்திரத் தேரொன்றினை நிர்மாணித்துள்ளனர். இந்த இரண்டு தேர்களையும் நிர்மாணித்த ஆறுமுகம் சிற்பாலயத்தினரையும் அதன் அதிபர் சிற்பச் சக்கரவர்த்தி ஆ. ஜீவரத்தினத்தின் ஆற்றல் வாய்ந்த கைவண்ணத்தினையும் மனம்திறந்து பாராட்டுகின்றோன்றோம்.

கலையம்சங்கள் நிறைந்த இச் சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று (7-7-97) காலை 10 மணி முதல் 12 மணிவரை வரும் சுப வேளையிலே நடைபெறுகின்றது. சமயக் குருமார்கள், ஞானிகள், புத்திஜீவிகள் அனைவரும் விதந்து பாராட்ட அமைக்கப்பட்ட இச்சித்திரத்தேரிலே முத்துமாரி அம்பாள் 10-7-97 அன்று திருவுலா வரவிருக்கின்றார்.

சிற்பியை ஏற்றி உலாவருவது பண்டைக் காலந் தொட்டுப் பயின்று வரும் வழக்காறாகும். இன்று சடங்காசாரமாகக் கருதப்படும் வெள்ளோட்ட நிகழ்வுக்குப் பின்புலமாக மூன்று முக்கிய காரணிகள் உண்டு எனக் கருதலாம்:

(அ) விஷ்வகர்ம உள்ளிட்ட தேவர்களுக்குத் தேரினைச் சமர்ப்பித்தலும், அவர்களுக்குப் பிரியமான சடங்காசாரங்களை நிகழ்த்துதலும்,

(ஆ) தேரை நிர்மாணித்த சிற்பியை, சிற்பக்கலைஞர்களைக் கௌரவித்து உயர் மதிப்பளித்துப் போற்றும் பாரம்பரியத்தின் வெளிப்பாடு

(இ) தேர் நல்லநிலையில் அமைந்துள்ளதா? சரியாக ஓடக் கூடிய தகுதிப்பாட்டினைக் கொண்டுள்ளதா? என்பனபோன்ற விடயங்களைப் பரீட்சித்துப்பார்த்தல்.

இம் மூன்று காரணிகளையும் விட வேறு காரணிகளும் இருக்கலாம். இறைவனை ஏற்றி திருவிழா செய்வதன் முன்னர் அத்தேரினை நிர்மாணித்த சிற்பியை ஏற்றி உலாவருவது எமது தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினையே புலப்படுத்துகின்றது எனலாம். கலைகளைக் கடவுளாகக் கண்டு வணங்கிய சமூகம் கலைஞனையும் மதித்துப் போற்றியமையையே வெள்ளோட்ட விழா புலப்படுத்தி நிற்கின்றது.

எல்லாம் வல்ல ஸ்ரீமுத்துமாரி அம்பாளின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

லாநிதி எஸ். சிவலிங்கராஜா,
துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

தவறாத பூசை
கள், அபிஷேக
கள், வைகாசிவிசா
கல், மாசிமக
ர்சனை, சித்திரா
தி திருவிளக்குப்
விழாக்கள் என்ற
பலவற்றைப் பக்தி
டு, அடியார்களை
ண்ணம் ஆற்றிய
க் குருக்கள் அம
லோகநாதக் குருக்
த பணியை அவர்
ரார்களும் ஆற்றி
விதந்து பாராட்
.
ணத்துச் சைவால
ல முன்மாதிரியா
ள்ளக் கூடியதாக
த்தின் செயற்பாடு
மந்துள்ளன. சைவ
வைதிகப் பொலி
ண்ட மதிப்புயர்
ாதக் குருக்களின்
ன்றல்களை மனந்
ராட்ட வேண்டும்.
மாரி அம்பாளுக்கு
யான அழகிய
டுகள் அமைந்த

அடியார்கள் வேண்டுவதை வேண்டியாங்கு வழங்கும் ஸ்ரீ முத்து மாரியம்பாளின் அழகுப் பொலிவுக்குக் கட்டியம் கூறுவதாகத் சித்திரத் தேரின் அழகும் அமைந்துள்ளது.


சிற்பசாஸ்திர விதிப்படி நிர்மாணிக்கப்பட்ட இச்சித்திரத்தேரின் அற்புதமான வேலைப்பாடுகளிலே ஆறுமுகம் சிற்பாலயத்தினர் தமது கைவண்ணத்தை நன்கு நிறுவியுள்ளனர்.

தேரிலே இறைவனை ஏற்றி உலாவருவதற்கு முன்னர் அத்தேரினை நிர்மாணித்த

## திருப்புகழ்ச் சந்தப் பாமாலை

சொல்லுமறை நாதச் சுவையாவே
தொல்லைதரு வாழ்விற் சுடர்வாளே
வில்லதுவும் வாளும் மிளிர் வாக
வெல்ல வரும் பேரை மிதிப்பாளே
கல்லுருவிக் கானுங் கடந்தேகிக்
காத்தருளுஞ் ஞானக் கதிராளே
நெல்லுறை சூழும் நிலம் வாழும்
நீண் முத்து மாரித் திருவாளே.

- ச. தங்கமாமயிலோன்



திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய முகப்புத்தோற்றம்

# ஆலயபிரதமகுருவின் ஆசிச் செய்தி

திருநெல்வேலிப்பதியின் கண்ணே எழுந்தருளியிருந்து அடியார்களுக்கு இன்னருள் பாலிக்கும் அருள்மிகு முத்துமாரி அம்பாளுக்கும், பரிவார மூர்த்தியாகிய விநாயகப் பெருமானுக்கும் அற்புதமான சித்திரத் தேர் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அழகும் கலையம்சமும் நிறைந்த அம்பாளின் தெய்வீகத் திருத்தேரினைத் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய அதிபர் சிற்பச் சக்கரவர்த்தி ஆ. ஜீவரட்ணம் தலைமையிலே அச்சிற்பாலயத்தினர் நிர்மாணித்துள்ளனர்.

நாட்டிலேற்பட்ட எத்தனையோ பிரச்சினைகளுக்கும் மத்தியிலே எம் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் திருத்தேர் அழகுற அமைக்கப்பட்டது அவளின் திருவருட் கடாட்சமேயாகும்.

அடியார்களுக்கு வேண்டியதை வேண்டியாங்கு ஈந்துவக்கும் அன்னை ஸ்ரீமுத்துமாரி அம்பாளின் திருவருளின் வியத்தகு சாதனைகளை எண்ணி எண்ணி இறும்பூதெய்துகின்றேன். அழகான தேரினை அமைத்த சிற்பி ஜீவரட்ணம் அவர்களையும், தேரினைக் காலம் காலமாகக் காத்து வைத்துப் பாலிக்கும் தேர்மண்டபத்தினை (தேர்முட்டி) அமைத்துத்தந்த மேஸ்திரியார் வே நடராசா அவர்களையும் அவரது குழுவினர்களையும் விதந்து பாராட்டுகின்றோம். இவர்களுக்கு எல்லாம் வல்ல எம் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் திருவருள் கிட்டுவதாக.

இச் சித்திரத்தேர் சிறப்புற அமைய நிதியுதவி, பொருளுதவி, சரீர உதவியளித்த அடியார்கள் அனைவருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் திருவருள் கிட்ட வேண்டுமென்று பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ- சி. கிருபாகரக் குருக்கள்
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள்ஆலயம்,
திருநெல்வேலி.

# ஸ்தபதியின் சமர்ப்பணச் செய்தி

ஈழமணித் திருநாட்டில் இலங்கிடும் வடபாலில் சீரோடும் சிறப்போடும் பார்போற்றும் திருத்தலமே திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம். இவ்வாலயத்திற்கு அழகிய சிற்பத்தேர் பெருநிதியுடன் அருள் பொழியும் வண்ணம் அமைந்தது அவளது அருளாட்சியே.

சிவஸ்ரீ சி. கிருபாகரக் குருக்களின் இடைவிடா முயற்சியும் அன்பர்கள் அடியார்களின் அளப்பரிய ஈடுபாடுமே இந்தச் சிற்பத்தேர் சிறந்தோங்கிய நிலையில் உருவாகுவதற்கு காரணமாய் அமைந்ததெனலாம்.

இத்தேரின் அமைப்பிலுள்ள சிறப்பை நோக்குகையில், ''நவகோண முகோத்திர நூற்றெட்டுச் செங்கோண வடிவமைப்பில்'' ஸ்ரீ சக்கரத்தில் அம்பாள் வீற்றிருப்பது போல அமைந்த அமைப்பே பேரமைப்பு. இவ்வமைப்பு ஈழத்தில் வேறோரிடத்திலும் அமையவில்லை; அம்பாளின் திருச்சந்நிக்கு அடியேன் சென்றபொழுது அவள் எனக்கு அருளிய மனப்படிவே இவ்வமைப்பு. இஃது என் செயலால் அமையவில்லை எல்லாம் அவள் செயலே.

இவ்வாலயம் நாட்டில் இடர்ப்பாடெல்லாம் ஏற்பட்ட பொழுதும் சீர் குன்றாமல் விளங்குவதே பெருஞ்சிறப்பு. அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேரில் இவர்ந்து அடியார்களுக்கெல்லாம் காட்சி கொடுக்கும் கண்கொள்ளாக் காட்சியை அடியார்கள் காணவரும்பொழுது தேரிலுள்ள அழகிய கலை நுட்பங்களையும் வண்ணமிகு சிற்பங்களையும் அமைப்பின் வடிகால்களையும் தெளிவுறக் காணலாம்.

உலக மாதாவாகிய அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் யாவருக்கும் அருள் மழை பொழிய அவளது பாதகமலங்களைத் தொழுகின்றேன்.

ஸ்தபதி ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரி
ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்

## விழா சிறப்புற வாழ்த்துவோர்


ி ரெக்ஸ்
த, சாவகச்சேரி.

ி களஞ்சியம்
வீதி, யாழ்ப்பாணம்.

ல்க் கவுஸ்
த, யாழ்ப்பாணம்.

ரவி மோட்டோஸ்
245, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நாஷனல் மோட்டோஸ்
266B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அ. க. ஆறுமுகமும் மைந்தர்களும்
81, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாயில் இயங்கும்
# மனநோய்ச் சிகிச்சைப் பிரிவில் உரிய உபகரணங்கள் இல்லை!

திருநெல்வேலி, ஜூலை 7

மானிப்பாயில் இயங்கி வரும் தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்திய சாலையின் மனநோயாளர் சிகிச்சைப் பிரிவில் இருந்த தொழில் சார் சிகிச்சை உபகரணங்கள் பல கடந்த இடப் பெயர்வின் போது காணாமற் போய்விட்டன.

இதனால் மனநோயாளர்களுக்கான சிகிச்சைகளை உரிய வசதிகளுடன் வழங்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பொது நிறுவனங்களினதும், தனிப்பட்டவர்களினதும் உதவிகள் மூலம் இந்த உபகரணங்களை மீண்டும் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் நடந்த மேற்படி வைத்திய சாலையின் உளநலச் சங்கத்தின் புனரமைப்புப் பொதுக் கூட்டத்தில் இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டதாக சங்கத்தின் செயலாளர் சோ. ராஜ்குமார் தெரிவித்தார்.

மனநோயாளர்களுக்காக ஆண்கள், பெண்கள் என இரு பிரிவினருக்குமாக இங்கு வார்ட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மனநோய்கள் சம்பந்தமாக சிகிச்சைக்கு வருவோரில் பெரும்பாலானோர் பெண்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

# வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம்

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் பட்டதாரிகளின் நிலையினை எடுத்து விளக்கி கடிதம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

பயிலுநர் என்ற அடிப்படையில் பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்குவதை விடுத்து நிரந்தர நியமனங்களை அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் வேலை வாய்ப்பின்றி இருக்கும் பட்டதாரிகள் அண்மையில் கூடி இச் சங்கத்தை அமைத்துள்ளனர். (ஐ)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

"சைவத்தமிழ்க்கனி"

### உயர்திரு. அ. தற்பரானந்தன்
(கோட்டக்கல்வி அதிகாரி)

சங்கானைக் கல்விக்கோட்டத்தில் உதவிக்கல்விப் பணிப்பாளராகவும் கோட்டக்கல்வி அதிகாரியாகவும் பணியாற்றி உடுவில் கல்விக்கோட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உயர்திரு. அ. தற்பரானந்தன் அவர்கள் மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றி சைவத்திருமுறைகளுக்கு பெருவிழா எடுத்த பெருந்தகையினது சைவ, தமிழ், கல்விப்பணிகளை நன்றியுடன் பாராட்டி பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறோம்.

நன்றிக்கடனுடன்:
யா/ சுழிபுரம் கிழக்கு அ. மி. த. க. பாடசாலை சுழிபுரம்.

(48247)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 15 — 05 — 1930

மறைவு: 08 — 06 — 1997

### அமரர் இராமன் மார்க்கண்டு
(அச்சுவேலி)

அன்னாரின் இல்லத்தில் 08 . 07 . 97 செவ்வாய்க் கிழமை அன்று காலை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்வதுடன், அன்னாரின் இறுதிச் சடங்கிற்கு சிரமத்தைப் பாராமல் வருகை தந்தோருக்கும், அளப்பரிய உதவிகளைச் செய்தோருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

திருமதி மா. கனகரத்தினம்
(மனைவி)

(48233)

# சர்வதேச கூட்டுறவாளர் தினத்தில் புதிய சம்பளத் திட்டம் வெளியாகும்

யாழ்ப்பாணம், ஜூலை 7

கூட்டுறவு ஊழியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம் இவ்வருட சர்வதேச கூட்டுறவாளர் தினத்தன்று வெளியிடப்படும் என்று கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவு நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவரும் யாழ். ப. நோ. கூ. சங்கத் தலைவருமான சீ. வி. கே. சிவஞானம் அண்மையில் கொழும்பில் அவரைச் சந்தித்த சமயம் மேற்கண்டவாறு உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு ஆணையாளரைச் சந்தித்த சீ. வி. கே. சிவஞானம், கூட்டுறவு ஊழியர்களுக்கென புதிய சம்பள ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

கூட்டுறவு ஊழியர்களுக்கான புதிய சம்பளத்திட்டம் சகல படிகளையும் உள்ளடக்கியதாக அமையும் என்றும் — ஓய்வுபெறும் பணியாளர்களின் பணிக்கொடை போன்ற கொடுப்பனவுகளைத் திரட்டிய மொத்த சம்பளத்திலேயே கணக்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் — கூட்டுறவு ஆணையாளர் தம்மிடம் அச்சமயம் உறுதி அளித்ததாக சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் க. சண்முகலிங்கத்தையும் அவர் சந்தித்து பலதரப்பட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

(ஐ-3)

## புங்குடுதீவில் குடி தண்ணீர் பெற சிரமம்

நெடுந்தீவு, ஜூலை 7

புங்குடுதீவுப் பகுதியில் குடி தண்ணீர் பெறுவதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சுமார் 3 மைல் தூரம் சென்று நீண்ட நேரம் காத்திருந்து குடி தண்ணீர் பெற வேண்டியுள்ளதாகப் பலரும் கவலை தெரிவித்தனர்.

(ஐ-111)

## நூலகம் திறப்பு

மானிப்பாய், ஜூலை 7

மானிப்பாய் கட்டுடைச் சந்தியில் பொது நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் கடந்த வாரம் இதனைத் திறந்து வைத்தார்.

மானிப்பாய் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் இந்த திறப்பு விழா வைபவம் இடம் பெற்றது.

(ஐ-90)

## திரைப்படத்...
(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர் ஆகியோர் தலைமையில் திரைப் படத் தயாரிப்பாளர்கள் வீதியில் அமர்ந்து மறியல் போராட்டம் நடத்தினர். இதனையடுத்து மாநில போக்குவரத்து அமைச்சர் பொன்மொழி சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து சென்று பேச்சு நடத்தியதை அடுத்து மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

தமிழ்த் திரைப்பட இயக்குர்நகள் சங்கத்துக்கும் தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்துக்கும் இடையே கடந்த ஒரு மாதகாலமாக நீடித்து வரும் பிணக்கினால் திரைப் படத் தயாரிப்புப் பணிகள் தமிழகத்தில் பாதிக்கப்பட்டுள்ளன. (ஐ - 4)


## பிரபா பிரகாஸ் மேளக் கோஷ்டி

சிறந்த மேளக் கோஷ்டி
தொடர்பு:
க. பாலசுந்தரம்
பெருமாள் கோயில்
தெற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(48249)


# கோட்ட மட்ட இலக்கியப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே 'யுனெஸ்கோ' ஆதரவில் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளில் வலயம் ஒன்று கோட்டங்களுக்கான கோட்டமட்ட போட்டிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 9–30 மணிமுதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் பிரிவு ரீதியாக நடத்தப்பட்ட போட்டிகளில் முதல்இரண்டு இடங்களையும் பெற்றபோட்டியாளர்கள் கோட்டமட்ட இறுதிப் போட்டிகளில் கலந்து கொள்வர்.

இந்த இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் போட்டிக்காக வழங்கப்பட்ட முன்னைய தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து அதன் மூலம் போட்டியில் தோற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
# கண்ணீர் அஞ்சலி

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்க
முன்னாள் தலைவர்

### திரு வீ. நவரத்தினராசா

அவர்களின் மறைவை முன்னிட்டு சங்கப் பணிப்பாளர், பணியாளர்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர், பணியாளர்கள்.**

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

(சி-1081)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 07 — 10 — 1926

நிறைவு: 07 — 06 — 1997

### தம்பையா சிவசுப்பிரமணியம்

எங்களில்ல ஒளி விளக்காய் எல்லோர்
வாழ்வுக்கும் வழிகாட்டி மலர்ந்தாய்
தோல்வியே காணாது வாழ்ந்தாய் — என்றும்
இறைபதத்தை நாடியே நின்றாய்
அடைந்தாய் துதிபதம் — அவன் பாதத்தில்
சாந்தியோடு நிறைகவென என்றும்
வழுத்தியே நாம் வாழ்வு தொடர்கின்றோம்.

அன்னாரது இறுதிச் சடங்குக் கிரியைக் காலத்திலும் அந்தியேட்டி நிகழ்வுகளிலும் கலந்து கொண்டோர்க்கும், அனுதாபங்கள் தெரிவித்தும் உற்ற விடத்து உதவிகள் புரிந்து துணை நின்றோர்க்கும் எங்கள்இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவோடு வாழும்:
அன்புத் துணைவி, பிள்ளைகள்,
மருகர், பேரப்பிள்ளைகள், சகோதரர்,
மைத்துனர், மைத்துனி, உறவினர்.

15, லைமன் வீதி,
நல்லூர்.

(48253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவும் படைப்புகள் தேவை

## துணைவேந்தர் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 7

எழுத்தாளர்கள் தமது படைப்புக்களில் எமது பிரதேசத்தின்உற்பத்தித்திறனை அதிகரிக்க உதவக் கூடிய கருப்பொருள்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை;

நல்லை ஆதீன கலா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற ஒன்றுகூடல் வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் இந்தக் கருத்தினை முன்வைத்தார். யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்), தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ந. சுப்பிரமணியம் ஐயர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் கலாநிதி காரை சுந்தம்பிள்ளை, பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் சோ பத்மநாதன் ஆகியோர் பதவி உயர்வு பெற்றமை குறித்து தேநீர் விருந்துபசாரம் கடந்த மாத இறுதியில் நடைபெற்றது.

யாழ். இலக்கிய வட்ட அங்கத்தவர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் அழைக்கப்பட்டிருந்த இந்த வைபவத்தை பதவி உயர்வு பெற்ற நால்வரும் சேர்ந்து ஒழுங்கு செய்திருந்தனர்.

எழுத்தாளர் சொக்கன் வைபவத்துக்குத் தலைமை ஏற்று அதனை நடத்தினார். பதவி உயர்வு பெற்ற நால்வரினதும் இலக்கிய சேவைகளைப் பாராட்டிப் பலரும் பேசினர்.

வழமையாக நடத்தப்படும் பாராட்டு விழாக்கள் போலன்றி, கௌரவிக்கப்பட வேண்டியவர்களே இலக்கிய நண்பர்களை அழைத்து விருந்துபசாரம் நடத்தும் புதிய முறையினைப் பலர் தமது பேச்சுக்களில் குறிப்பிட்டுக் கூறினர்.

தமிழ் மக்களின் குறிப்பாக குடாநாட்டு மக்களின் இன்றைய வாழ்க்கை நிலையைச் சித்திரிக்கும் இலக்கியப் படைப்புக்கள் தேவை. அவையே காலத்தின் பதிவாக எதிர் காலத்தில் பயன்படும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. (அ)

JAFFNA CENTRAL COLLEGE
FOUNDATION DAY
CHALLENGE TROPHY - 1997

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்
நடத்தும்
6 பேர் கொண்ட ஆறு (6) ஓவர்களைக் கொண்ட கிரிக்கெற் சுற்றுப் போட்டி
விண்ணப்ப முடிவு திகதி: 15 - 07 - 97
அணி ஒழுங்கு தெரிவு: 19 - 07 - 97
போட்டிகள் யாவும் இம்மாதம் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் நடைபெறும்.
நுழைவுக் கட்டணம் ரூ 100/-
விண்ணப்பப் படிவங்களை போட்டிக் குழு இணைச் செயலாளர்களிடம் பெற்றுக் கொள்ளவும்.

சொ. விமலதாசன்,
29, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

எஸ். பிறேம்குமார்
23, கனகரத்தினம் வீதி,
அரியாலை.

இணைச் செயலாளர்கள்
(சி/ 1085)

வாழ்த்துகின்றோம்



பண்டிதர்
உயர்திரு. த. இராசரத்தினம்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கடந்த பன்னிரண்டு ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்து இன்று (07-07-97) ஓய்வுபெறும் சைவப்புலவர், பண்டிதர் உயர்திரு. த. இராசரத்தினம் அவர்கள் ஆற்றிய பணிகள் அளவிடமுடியாதவை. கற்பித்தலுடன் பாடசாலையில் சைவமும், தமிழும் வளர்வதற்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. அறுபதாம் அகவையில் காலடி எடுத்து வைக்கும் இவருக்கு எமது மனம் நிறைந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் தொடர்ந்தும் சமுதாயத்திற்கு தனது சீரிய பணிகளைச் செய்வதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும் என வேண்டிக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ அத்தியார் இந்துக்கல்லூரி,
நீர்வேலி.
(48214)

# குடாநாட்டில் சுகாதார வாரம்

# இன்று முதல் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

வருடா வருடம் அனுஷ்டிக்கப்படும் சுகாதார விழிப்புணர்ச்சி செயற்றிட்டத்திற்கமைய இவ்வருடம் இன்று முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை சுகாதார வாரம் அனுட்டிக்கப்படவுள்ளது.

இவ் வருடத்திற்கான தொனிப் பொருள் ''தலையெடுக்கும் தொற்று நோய்களும் அதற்கான உலகளாவிய அவதானமும் எதிர் நடவடிக்கைகளும்'' என உலக சுகாதார நிறுவனத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

முக்கியமாகத் தலைதூக்கியுள்ள தொற்று நோய்கள் சம்பந்தமான விழிப்புணர்வையும் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைத் தூண்டிவிடும் நோக்கத்துடன் சுகாதார வைத்திய அதிகாரி மட்டத்தில் பல செயற்றிட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பின்வரும் நோய்கள் தொற்றுவதைக் கட்டுப்படுத்துவதற்கு கூடிய கவனம் செலுத்தப்படும்:-

★ நீர், உணவு மூலம் தொற்றும் நோய்களான வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல், செங்கண் மாரி (ஈரல் அழர்ச்சி).

★ தொடுகையினால் தொற்றும் நோய்களான கண் நோய், கொப்புளிப்பான், சிரங்கு.

★ சளி உட்பட சுவாசத்தினால் தொற்றும் நோய்களான காசநோய், சின்னமுத்து, தொழுநோய்.

★ பாலுறவு மூலம் சமுதாயத்தில் பரவிவரும் மேகநோய் (சிபிலிஸ்), வெட்டை நோய் (கொனறியா), எயிட்ஸ்.

★ விலங்கு கடியினால் பரப்பப்படும் விசர்நாய் நோய்.

★ தோலினூடாகவும், உணவு மூலமும் தொற்றும் குடற் புழுநோய்.

★ நுளம்பினால் பரப்பப்படும் தொற்றுநோய்களான மலேரியா, டெங்கு காய்ச்சல், மூளைக் காய்ச்சல், யானைக் கால்நோய்;

★ எதிர்பாராமல் உணவு நஞ்சாவதனால் ஏற்படும் நோய்.

(ஐ)

## பாடத்திட்ட விவரங்கள்

வலிகாமம் தெற்கு, ஜூலை 7

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கான புதிய பாடத்திட்டங்கள். மாதிரி வினாத்தாள்கள் போன்றன தேசிய கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டு, அவை தற்போது பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (ஐ-152)

## நியமனம

நெடுந்தீவு ஜூலை 7

நெடுந்தீவு கோட்டக் கல்விப் பிரிவில் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி வந்த அ. வெ. அரியநாயகம் நெடுந்தீவு கோட்டக் கல்வி உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ 111)

## ஜெனரேற்றர் வந்து சேர்ந்தது

தென்மராட்சி, ஜூலை 7

சாவகச்சேரிக்கு புதிய 250 கே. வி ஜெனரேற்றர் வந்துள்ளதையடுத்து மேலும் சில பகுதிகளுக்கு மின்சார விநியோகம் விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளது.

(ஐ-117)

எமது புதிய
வெளியீடு
சரத்குமார்
நடித்த
சூர்ய வம்சம்
'வீடியோ விமல்'
யாழ்ப்பாணம்.
(48256)

### திராவிட மொழியியல் மாநாட்டில்

# ஈழத்தமிழ் பேராசிரியரின் உருவப்படம் திரைநீக்கம்

திருநெல்வேலி, ஜூலை 7

சென்னையில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கடந்த மாதம் நடைபெற்ற திராவிட மொழியியல் மாநாட்டின் போது ஈழத்தின் மூத்த தமிழ் அறிஞர் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் உருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது.

திராவிட மொழிகள் மன்றம் என்னும் அமைப்பு நடத்திய இந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்த தமிழக முதல்வர் மு. கருணாநிதி பேராசிரியரின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தமிழகத்தின் தமிழ் அறிஞர்கள் பலர் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸும் பங்குபற்றினார். பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் கல்விப் பணி தமிழ்ப்பணி பற்றி அவர் அங்கு உரையாற்றினார்.

கடந்த மாதம் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இந்த திராவிட மொழியியல் மாநாடு நடைபெற்றது. (ஐ-135)

# சாவகச்சேரிச் சந்தையில் புகையிலைப் பெட்டகத்தில் தீ!

## சனிக்கிழமை இரவு சம்பவம்

தென்மராட்சி. ஜூலை 7

சாவகச்சேரி சந்தைக்குள்வர்த்தகர்கள் புகையிலையை சேமித்து வைக்கும் பெட்டகம் ஒன்று கடந்த சனியன்று இரவு தீப்பிடித்து எரிந்தது. இதனால் அதற்குள் இருந்த ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான புகையிலைகள் எரிந்து சாம்பராகின.

இப்பெட்டகத்தின் மீது கொளுத்தி வைக்கப்பட்ட ஊதுபத்தியில் இருந்து தீ உள்ளே பரவியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

பெட்டகத்தில் தீ பற்றியதும் அப்பகுதியில் கடமையில் இருந்த படையினர் தீயை உடனடியாக அணைத்ததால் தீ ஏனைய பெட்டகங்களுக்கும் பரவாமல் தடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# ஆசிரியையைப் பின்தொடர்ந்து சங்கிலியை அபகரித்த இளைஞன்

## மட்டுவில் பகுதியில் சம்பவம்

சாவகச்சேரி, ஜூலை 7

பாடசாலை முடிந்து திரும்பிக் கொண்டிருந்த ஆசிரியை ஒருவரை சைக்கிளில் பின் தொடர்ந்த இளைஞர் ஒருவர் அவரது கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிவிட்டார்.

மட்டுவில் தெற்கு வேரற்கேணி பகுதியில் கடந்த புதனன்று நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

மட்டுவில் பகுதியைச் சேர்ந்த மகளிர் கல்லூரி ஆசிரியை ஒருவரே இவ்வாறு சங்கிலியை இழந்தார்.

பாடசாலை முடிந்து திரும்பிக் கொண்டிருந்த பிரஸ்தாப ஆசிரியையைப் பின் தொடர்ந்த இளைஞர் ஆசிரியையின் வீட்டு வாசலில் வைத்தே சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தார்.

(ஐ-31)

பெருமையுடன் வாழ்த்தி வரவேற்கின்றோம்

உயர்திரு. அ. வி. கணேசலிங்கம்
(கோட்டக்கல்வி அதிகாரி)

யா/ சங்கானை சிவப்பிரகாச ம. வி. அதிபராக தரம் 1 இல் இருந்து கோட்டக்கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று உடுவில் கல்விக்கோட்டத்திற்கு சென்று சங்கானைக் கோட்டக்கல்வி அதிகாரியாக வருகைதந்துள்ள

உயர்திரு. அ. வி. கணேசலிங்கம்
அவர்களது

சிறந்த சீரிய பணிகளை எதிர்பார்த்து அவரது வருகையை பெருமையுடன் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

வாழ்த்தும்!
யா சுழிபுரம் கிழக்கு அ. மி. த. க. பாடசாலை, சுழிபுரம்.
(48248)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

தரமான புதிய மிருதங்கம், தபேலா, டோல்கி என்பன விற்பனைக்குண்டு. பழைய வாத்தியங்கள் சிறந்த முறையில் சீர் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: க. இராசநாயகம், 82/16, ஆசீர் வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். [48197]

ஒரு மாதம் நிரம்பிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சுப்பராம் பார்மஸி அன் குறோசறி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி. [48241]

புதிய Birla Yamaha, 2.3 KV) ஜெனரேட்டரும், Sharp போட்ரோஸ்ரற் இயந்திரமும் .விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 17/1, கைலாச பிள்ளையார் கோயில் மேற்குவீதி, நல்லூர். [48236]

## யானை தாக்கி உயிரிழந்த குடும்பஸ்தர்

பாலம்பிட்டி தெட்சணா மருதமடு அகதி முகாமில் தங்கியிருந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கனகராசா தவம் (வயது 44) என்பவர் கடந்த புதன்கிழமை இரவு 9.00 மணியளவில் யானையால் தாக்கப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமானார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து மேற்படி முகாமில் தங்கியிருந்தார்.

## சத்தியா ஸ்ரோர்ஸ் பேக்கரி

**கடைகளும், பேக்கரியும், நிலமும் உடனடியாக விற்பனைக்குண்டு**

தொடர்பு:

**கந்தையா விஜயரட்ணம்**
உரிமையாளர்
96, பாஷில் வீதி,
(சின்னக்கடைச் சந்தைக்கு எதிர்ப்புறம்)
யாழ்ப்பாணம்.

77, Havlock Rd.
Colombo -5

(48252)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**வரலாற்றுத்துறைத்தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்**

அவர்கள் எழுதிய

ஈழத்து இந்துசமய வரலாறு கி. பி. 500 வரை. பாகம் 1 யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்துள்ளது.

விலை: ரூபா 465.00

தேவைகளுக்கு யாழ்ப்பாணப்பல்கலைக்கழக உதவிப்பதிவாளர், கல்விக்கிளை அல்லது நிதியாளரிடம் தொடர்பு கொள்க.

- பதிவாளர்

1997 – 07 – 03

(சி-1083)

## விற்பனைக்குண்டு

அடையாள அட்டை கவரிங் மிசின், போட்டோ பிரதி டோணர் வகைகள், கைக்கடிகார பற்றறி வகைகள், மணிக்கூடுகள், லமனேற்றிங் கவர், றேடியோ வீடியோ, ஓடியோ கசட், பிலிம்ரோல் வகைகள் என்பனவற்றை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

## செல்வம் ஸ்ரோர்ஸ்

**330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

[48250]

## வாழ்த்துகிறோம்

யா/ நெடுந்தீவு
**றோ. க. மகளிர் வித்தியாலயத்தில்**

ஜி. சி. ஈ. (உயர் தரம்) வகுப்பு தொடங்கவும் புதிய கட்டடத்தை கட்டி முடிக்கவும் உதவியமைக்கும் மெற்கத்தியபான்ட் வாத்திய இசைக் கருவிகளை அன்பளிப்புச் செய்தமைக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான

கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா (செயலாளர் நாயகம்)
கௌரவ உமாபதி பாஸ்கரன்
கௌரவ எஸ். சிவதாசன்
கௌரவ எஸ். தங்கவேல்
யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தோழர் கே.வி. கே. ஜெகன்
தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் தோழர் என். மனோகரன்
நெடுந்தீவு அரசியல் பொறுப்பாளர் தோழர் எம். காளிதாஸ்

ஆகியோருக்கு எம் இதயம் கனிந்த நன்றிகள்:

**பெற்றோர், பழையமாணவர்கள்**
**றோ. க. மகளிர் வித்தியாலயம், நெடுந்தீவு.**

7 - 7 - 1997 (48221)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



ஆசிரிய சிரோன்மணி

**அமரர் இராமலிங்கம் அப்பாத்துரை**

(முன்னாள் உபஅதிபர், பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்)

தோற்றம்: 19–07–1914
மறைவு: 18–06–1996

**திதி: 07 . 07 .1997**

என்றும் உங்கள் நினைவகலா:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'திருமந்திரம்',
பண்ணாகம், சுழிபுரம். (48200)

## தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் - (வ.து)

பதிவு இல. J/1591 - 06 - 03 - 1972

## வெள்ளி விழா (1972-1997)

**07 - 07 - 1997**

தெல்லிப்பழை பனை, தென்னை வள அ. கூ. சங்கத்தின் 25ஆவது ஆண்டு நிறைவையொட்டி 07-07-97 திங்கள் காலை 10.00 மணிக்கு (இன்று) ஆனந்தா வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ள வெள்ளி விழாவின் விஷேச நிகழ்வாக சங்கத்தில் தொடர்ந்து 25 வருடங்கள் தொழில் புரியும் அங்கத்தவர்களையும் 25வருடங்கள் பணிபுரியும் பணியாளர்களையும் கௌரவித்து பரிசில்கள் வழங்கப்படும்.

வெள்ளிவிழாக் காணும் சங்கத்தின் அங்கத்தவர்களையும், பணியாளர்களையும் வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்,
**தெல்லிப்பழை ப.தெ.வ.அ.கூ.சங்கம்.**

ஆனந்தா வீதி,
மானிப்பாய். (47309)

## பிரதிஷ்டை ஆராதனை அழைப்பு

''என் கண்களும் என் இதயமும் எப்பொழுதும் இவ்வாலயத்தின் மேல் நோக்கமாயிருக்கும்.''
II நாளாகமம்: 7:16

தேவ கிருபையாலும் தேவஜனங்களின் ஆதரவாலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள எமது

**எபநேசர் ஜெப ஆலய**

**★ பிரதிஷ்டை ஆராதனை ★**

இன்று திங்கட்கிழமை ஜூலை 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடத்த தேவகிருபை பெற்றிருக்கிறோம். இவ் ஆராதனையில் கலந்து சிறப்பித்து தேவ நாமத்தை மகிமைப்படுத்தும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

போதகர், ஊழியர்கள், சபை மக்கள்,
எபநேசர் ஜெப ஆலயம்.
கனகரட்ணம் வீதி,
வட்டுக்கோட்டை.

(48207)

ஓம் விராட் விஸ்வபிரமனே நம

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**தெய்வானை (செல்லம்) செல்லத்துரை**

தோற்றம்: 14 – 10 – 1940
மறைவு: 30 – 06 – 1995

**திதி: 07-07-1997 (திருதியை)**

எங்கள் அன்பின் சிகரமே! பாசமிகு அம்மாவே, குடும்பத்தின் ஒளி விளக்கே இன்று அணைந்து சிவலோகம் சென்றதேனோ! உற்ற துணையிழந்து உங்கள் நினைவால் பரிதவிக்கின்றோம் அம்மாவே! உங்கள் ஆத்ம சாந்திக்காக நீர்வை முருகனை வேண்டி நிற்கின்றோம்.

இன்று(07-07-97) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்.

நீர்வேலி மத்தி.
நீர்வேலி. (48227)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முன்னுரிமை தேவை

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருண்மியம் எல்லா வகைகளாலும் தேய்ந்து போயிருப்பது ஒன்றும் புதிய தகவல் அல்ல. விவசாயத்துறையுடன் போட்டி போட்டுக் கொண்டு இந்த மாவட்டத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்திய மீன்பிடித்துறையும் சரிந்து போய்க் கிடக்கிறது என்பதும் பழைய செய்தியே. எனினும் அந்தத்துறை 96 சத விதம் வீழ்ச்சி கண்டுள்ளது என்ற பிந்திய புள்ளிவிவரம் மிகவும் கவலைக்குரிய நிலையாகும்.

1983 ஆம் ஆண்டின் பின்னர் போரின் விளைவாக, அது உண்டாக்கிய பாதிப்புகளால் பலதுறை சார்ந்த தொழில்துறைகளும் குடாநாட்டில் வீழ்ச்சி கண்டன.

குடாநாட்டு மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னரும் தொழில்துறைகள் வீழ்ந்து கிடந்த நிலையிலிருந்து இன்னும் தலையைத் தானும் உயர்த்திப் பார்க்க முடியவில்லை. குடாநாட்டின் இரண்டு பிரதான தொழில் வளங்கள் விவசாயமும், மீன்பிடித்துறையுமாகும்.

விவசாயத்துறையை மேலெடுக்க சில நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட போதிலும் கடற்றொழிலை கண்விழிக்கச் செய்வதற்கு ஆக்க பூர்வமாகக் குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு இன்னும் நடவடிக்கைகள் இல்லை என்று அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து கடற்றொழில் செய்வதற்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன, இரவு நேரத்தில் தொழில் செய்வதற்கான தடை இன்னும் நீக்கப்படவில்லை. கடற்றொழில் பிரதானமாக இரவு நேரத்திலேயே செய்யப்படுவதாகும். அதனால் இப்போதுள்ள தடை மீனவ மக்களின் தொழில் வாய்ப்பை 90 சத வீதம் பாதித்துள்ளது. பகல் நேரத் தொழிலுக்கும் கடல் எல்லைகள் சுருக்கப்பட்டு விட்டன.

இவற்றுக்கும் மேலாக கடற்றொழில் உபகரணங்களைக் குடாநாட்டுக்கு எடுத்து வருவதில் உள்ள தடைகளும் கட்டுப்பாடுகளும் இன்னும் பெரிதாக நீக்கப்படவில்லை.

வடக்கு - கிழக்கு மீனவர் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக கொழும்பில் நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டில் சில தடைகள், கட்டுப்பாடுகளைத் தளர்த்த முடிவு செய்யப்பட்டது உண்மையே. எனினும் மிகமிக மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கே தொழில் வசதிகளை வழங்குவதாக அந்த முடிவுகள் அமைந்துள்ளன.

குடாநாட்டின் பொருளாதாரம் சீரடைவதற்கு விவசாயம், கடற்றொழில் ஆகிய இரண்டு பிரதான தொழில்களுக்குரிய வசதிகளும், வாய்ப்புகளும் விரைவில் பெருக்கப்படுவது அவசியம். இது விடயத்தில் உரிய அக்கறையும் முயற்சியும் குடாநாட்டு அதிகாரிகள் மட்டத்திலிருந்து வேகமாக மேற்கிளம்ப வேண்டும்.

புனர் நிர்மாணத்துக்கு முன்னர் பொருளியல் மீளமைப்புக்கும் தொழில் வாய்ப்புக்கும் அரசு முன்னுரிமை வழங்க வேண்டும்.

# மனித உரிமைகள் ஆணைக்குழு விரைவில் குடாநாட்டில் இயங்கும்

## அதன் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

மனித உரிமைகள் தேசிய ஆணைக்குழு விரைவில் யாழ்ப்பாணத்தில் அலுவலகம் ஒன்றை அமைக்க இருப்பதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஒ. எஸ் எம். செனவிரத்தின தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் தமது அலுவலகங்களைத் திறக்க இருப்பதாகத் தெரிவித்த அவர் முதல் அலுவலகம் யாழ்ப்பாணத்திலேயே திறக்கப்படும் என்றார்.

''யாழ். மக்களின் துன்பங்களை உணர்ந்துள்ளோம். அவர்களின் துன்பங்களை நீக்க நாம் பாடுபடுவோம். மக்கள் அச்சம் இன்றி வந்து தமது பிரச்சினைகளை எம்மிடம் தெரிவிக்கலாம்'' என்றும் அவர் கூறினார்.

(இ-3-150)

## பற்சிகிச்சை பிரிவு மீண்டும் இயங்குகிறது

தென்மராட்சி ஜூலை 7

கடந்த இரண்டு மாதங்களாக சாவகச்சேரி ஆஸ்பத்திரி பல் வைத்திய அதிகாரி கொழும்புக்குச் சென்றதால் மூடப்பட்டிருந்த பற்சிகிச்சைப் பிரிவு மீண்டும் நேற்று முன்தினம் முதல் இயங்குகிறது.

இப் பற்சிகிச்சைப் பிரிவுக்கு மந்திகை ஆதார வைத்தியசாலையிலிருந்து பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் கி. மதியழகன் வாரத்தில் இரு நாள்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் கடமையாற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-117)

## புலிகளின் இரு படகுகள் மீது தாக்குதல் என தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

வடபகுதியை அடுத்துள்ள கடலில் விடுதலைப் புலிகளுக்கு சொந்தமான இரண்டு படகுகள் கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகியதாகவும் —

இந்தப்படகுகளில் பயணம் செய்த பலர் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காயப்பட்டிருக்கலாம் என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே சமயம் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட இத் தாக்குதலில் சுமார் 30 புலிகளை ஏற்றிச் சென்ற படகு கடற்படையினரின் தாக்குதலில் தீப்பற்றி எரிந்தது என்றும் -

மற்றைய படகு தாக்குதலின் மத்தியிலும் கரையை அடைந்தது என்றும் ஏ. எவ். பி. செய்திஸ்தாபனம் தெரிவித்தது. (இ-3)

## 161 பேர் குருநகர் வருகை

குருநகர் ஜூலை 7

வன்னியில் இருந்து குடாக்கடல் ஊடாக 62 குடும்பங்களைச் சேர்ந்த 161 பேர் கடந்த சனிக்கிழமை குருநகர் இறங்கு துறையை வந்து சேர்ந்தனர். (இ-51)

# கொளுத்தப்பட்ட மிஷன் கப்பலை படையினர் பயன்படுத்தினரா?

## புலிகள் குற்றஞ்சாட்டியதாக அதன் கப்டன் தகவல்

கொழும்பு ஜூலை7

பொதுமக்களை ஏற்றிஇறக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட மிஷன் கப்பலில் படையினரும் ஏற்றி இறக்கப்பட்டுள்ளனர் என விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியதாக கடந்த செவ்வாயன்று பேசாலைக் கடலில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட அந்தக் கப்பலின் கப்டன் நாங்ஹாடி தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளால்கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த மூன்று நாள்களிலும தனது உயிர் குறித்து தான் கவலைப்பட்டுக்கொண்டிருந்ததாகவும் இந்தோனேஷியரான அந்த கப்டன் கூறினார்:

சுமார் 20 விடுதலைப்புலிகளால் தாங்கள் கைது செய்யப்பட்டு அதிவேகப் படகு ஒன்றில் கொண்டு செல்லப்பட்டதாகவும் -

கரையோரப் பகுதி ஒன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் தாங்கள் பல இடங்களுக்கு மாற்றப்பட்டதாகவும்-

இறுதியில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் காட்டின் மத்தியில் அமைந்திருந்த முகாம் ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

இலங்கையைச் சேர்ந்த ஏனைய கப்பல் சிப்பந்திகளையும் விடுவிக்குமாறு தான் விடுதலைப் புலிகளிடம் கோரியதாகவும் ஆனால் அவர்கள் தொடர்பானவிசாரணைகள் முற்றுப் பெறவில்லை என விடுதலைப்புலிகள்தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

இந்தக் கப்பலில் இருந்து கைது செய்யப்பட்ட 9பேரில் கப்பல் கப்டன் உட்பட இந்தோனேஷியரான இருவரும் புலிகளால் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே. (இ-10)

# கொக்குவில் மோதலில் புலிகள் இருவர் பலி!

## இராணுவத் தரபபு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

இம்மாதம் 5ஆம் திகதி கொக்குவிலில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்று குறித்தும்—

இம்மாதம் இரண்டாம் திகதி உரும்பிராயில் நடைபெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவம் குறித்தும்—

அச்செழுவில் உள்ள 51 ஆவது படையணிப் பிரிவின் தலைமையகம் பத்திரிகை அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

அவை வருமாறு:-

**கொக்குவில்**

இம்மாதம் ஐந்தாம் திகதி பி. ப. 5. 30 மணியளவில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இருவரைப் படையினர் நிற்குமாறு பணித்தனர். அப்போது அவர்களில் ஒருவர் படையினர் மீது கிரனேட் ஒன்றை எறிய முயன்றார். அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் படையினர் உடனடியாக நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் இருவரும் கொல்லப்பட்டனர்.

பின்வருவனவும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன:

பிஸ்டல்—1, தொலைத் தொடர்பு வானொலிக் கருவி—1, சையனைட்வில்லைகள்—2, 'டோக்ராக்'—1 (இலக்கம்: 06592), பை—1, கிரனேட்—6.

**உரும்பிராய்**

ஜூலை இரண்டாம் திகதி, உரும்பிராய்ப் பகுதிக்குச் சமீபமாக கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவக் கோஷ்டியினர் மீது, காலை 4 20 மணியளவில் கிரனேட் ஒன்று எறியப்பட்டது. அந்தச் சம்பவத்தில் படையினரில் ஒருவர் காயமுற்று, பின்னர் மரணமானார். மற்றும் மூன்று இராணுவத்தினர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். (அ)

# மெய்வல்லுநர்கள் நாளை புறப்படலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

திருகோணமலையில் நடைபெறும் வடக்கு, கிழக்கு மாகாண பாடசாலைகள் மெய்வன்மைப் போட்டிக்கு யாழ். மாவட்டப் பாடசாலை மெய்வல்லுநர்கள் இன்று புறப்பட்டுச் செல்ல மாட்டார்கள். அனேகமாக நாளையே அவர்கள் புறப்பட்டுச் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காங்கேசன்துறை — திருகோணமலை கப்பல் சேவை ஸ்தம்பித்திருப்பதன் காரணமாகவே மெய்வல்லுநர்கள் புறப்படுவது தாமதமாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாளை காலைக்கு இடையில் யாழ். மெய்வல்லுநர்களை திருகோணமலைக்கு அழைப்பதற்கான பயண ஏற்பாடுகளைத் தாம் செய்வதாகவும்—

திட்டமிட்டபடி எதிர்வரும் 10, 11, 12 ஆம் திகதிகளில் மாகாண மெய்வன்மைப் போட்டிகள் நடைபெறும் என்றும்—

மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலா நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

இதற்கிடையில்—

மாகாண மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றும் மெய்வல்லுநர்கள், அவர்களின் அனுசரணையாளர்கள் மற்றும் அலுவலர்களை திருகோணமலைக்குச் செல்வதற்கான ஆயத்தங்களுடன் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்குச் சமுகம் தரும்படி யாழ். கல்வித் திணைக்களம் கேட்டுள்ளது. (உ)

# வீரமக்கள் தின கலந்துரையாடல்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினால் நேற்றுக் காலை வேம்படி மகளிர் கல்லூரியில் வீரமக்கள் தின கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

20 வெகுஜன தொழிற் சங்க அமைப்புக்கள் பங்குபற்றிய இக் கலந்துரையாடலில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் செ. கிருபைராஜா சிறப்புரையாற்றினார்.

''எமது போராட்டத்தின் பின்னடைவு நிலைமைக்கு எம்மிடையேயுள்ள ஒற்றுமை இன்மையே காரணமாகும்.

எமது மக்களின் விடுதலைக்கான போராட்டம் ஐக்கியத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டுமென்ற நோக்குடன் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற தலைவர் சந் உமாமகேஸ்வரன் நினைவு நாளுடன் அமரர் அ. அமிர்தலிங்கம் நினைவு நாளுடன் அனைத்து தலைவர்களையும், போராளிகளையும், பொதுமக்களையும் நினைவு கூர்ந்து வீரமக்கள் தினத்தை அனுஷ்டிக்கிறோம்.'' என்று கூறினார்.

வோல்டர் ராஜனும் உரையாற்றினார். (இ-3)

**நாளை**

**ஆனி 24**

செவ்வாய்க்கிழமை

திதி: சதுர்த்தி முழுநாளும்

நட்சத்திரம்: ஆயிலியம் முற்பகல் 8.41 வரை.

சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 10 28– 11.58

ராகுகாலம்: 2.58 4.28

(பஞ்சாங்கம் ... பழைய [illegible])

# சுகாதார பரிசோதகர்களுக்கான பயிற்சிநெறி இங்கு நடைபெறும்

## அதற்கான ஏற்பாடுகள் துரிதம்

திருநெல்வேலி, ஜூலை 7

யாழ். சுகாதார பிராந்தியத்தில் பொதுச்சுகாதார பரிசோதகர் பயிற்சி நெறியை ஆரம்பிப்பதற்கு கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதனை அடுத்து அதற்கான நடவடிக்கைகள் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக இரு அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டு களுத்துறையிலுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர் பயிற்சிக்கான மத்திய நிலையத்திற்கு கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் களுத்துறையில் இப்பயிற்சி நெறிக்கான பாட விதானம் மற்றும் இது தொடர்பான உயர் மட்ட பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டு இங்கு திரும்புவர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள பொதுச் சுகாதார பயிற்சி நெறியில் 50 பேர் பயிற்சிபெற அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுப்பஸோ"வின்

இன்றைய வெளியீடுகள்!

சரத்குமார், தேவயானி

★ சூர்யவம்சம்

நாசரின் இரண்டாவது வெற்றிப்படைப்பு

வினித், கீத்தாரெட்டி

★ தேவதை

என்றும் தரமான CD பிரதிகளுக்கு

சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம்.

(சி/1088)



மீண்டும் யாழ். நகரில்!

07 - 07 - 1997 முதல்

புது மெருகுடன்

★ நகுலா ★

நகை மாடம்

இல. 241 G, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

நகைகள் குறித்த தவணையில் சிறந்த முறையில்
புதுவிதமான வடிவமைப்புக்களில்
செய்து கொடுக்கப்படும் என்பதை
எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(48251)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் எழுதுவினைஞராகக் கடமையாற்றும்

**திருமதி சறோஜினி அரியராசா**

அவர்களின் அன்புக் கணவர்

**அமரர் அரிச்சந்திரா அரியராசா**

(சிங்கர் கொம்பனி உரிமையாளர், பருத்தித்துறை)

அவர்கள் 02-07-97 அன்று இறைபதம் எய்தியுள்ளார். அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும்கவலையையும் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/ வட இந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.

(48258)


வேலை (VACANCY)

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் எமது ஸ்தாபனத்துக்குக் கீழ்வரும் வெற்றிடங்கள் உள்ளன தகுதியுடைய ஆண், பெண் இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி:- 16 - 07 - 1997

★ முகாமையாளர் ★ காசாளர்
★ விற்பனையாளர்

Managing Directors,

S. P. J. Ltd.

230, K.K.S. Road, Jaffna. (கி/1087)


## இதய அஞ்சலிகள்

எமது சக மாணவன்

**சீ. ரவிச்சந்திரன்**

அவர்களின் தந்தையார்

**திரு. கா. சீவரத்தினம்**

அவர்கள் 05 - 07 - 1997 அன்று திருகோணமலையில் இடம்பெற்ற அசம்பாவிதத்தில் அகால மரணமடைந்தார். அவரது எதிர்பாராத இழப்பால் ஏங்கித் தவிக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை இதய அஞ்சலிகளாகச் சமர்ப்பிக்கின்றோம்.

14 ஆம் அணி மாணவர்கள்,
மருத்துவபீடம்,
யாழ்ப்பாணம்.

(48254)

# குண்டு வெடிப்புத் தொடர்பாக
# விசேட பொலீஸ் குழு விசாரணை

கொழும்பு ஜூலை 7

திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலய குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்கவிசேட பொலீஸ் குழு ஒன்று நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் றோஹான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பொலீஸ் அத்தியட்சகர் உபாலி சில்வா தலைமையிலான இந்தக் குழு நேற்று தாக்குதல் நடந்த இடத்தில் சாட்சியங்களை பலரிடம் இருந்து பெற்றது.

இந்தக்குண்டுத்தாக்குதல் நடந்த இடத்தில் அநாதரவான நிலையில் இருந்து ஜீப் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தனியார் வானொலி ஒன்று தெரிவித்தது.

இது விசாரணைக்கு உதவக் கூடியதாக இருக்கலாம் என்றும் அந்த வானொலி தெரிவித்தது. (இ-3-164)

## நெற்றியிலும்-..

(முதலாம் பக்கத் தொடர்)

டத் திறப்பு விழா முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற தேநீர் விருந்துபசாரத்தையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை சண்முக வித்தியாலய அபிவிருத்திச் சங்க உறுப்பினரான பெ. சி. கணேசலிங்கத்தின் தோளில் கை போட்டவாறு நடந்து வந்தார்.

முதலில் எறியப்பட்ட கிரனேட் கணேசலிங்கம் மீதே வீழ்ந்து வெடித்தது.

அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தங்கத்துரைக்கு நெற்றியிலும்,நெஞ்சிலும் காயம் ஏற்பட்டு இரத்தம் பீறிட்ட நிலையில் அவர் கீழே வீழ்ந்தார்.

அவரது மெய்ப்பாதுகாவலர்களான கான்ஸ்டபிள் பி. சிவயோகநாதன், றிசேர்வ் பொலீஸார் எஸ். இராமநாதன் ஆகியோர் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தில் தங்கத்துரையின் மெய்ப்பாதுகாவலரான அமிர்தலிங்கம் என்பவர் இறந்ததாக முன் கொண்டு கிடைத்த தகவல்கள் சரியானவை அல்ல என்று நேற்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு விவேகானந்த வித்தியாலய ஆசிரியர் ஜீவரத்தினம் இச் சம்பவத்தில் காயமடைந்து திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்தார்.

வித்தியாலய உப — அதிபர் அமிர்தினி குலசிங்கம் (வயது 45), விடுதி மேற்பார்வையாளர் விமலகுமாரி நடராசா (வயது 45) ஆகியோரும், வித்தியாலய இரு மாணவிகளும் காயமடைந்து திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (இ-3-150)

## மரண...

(முதலாம் பக்கத் தொடர்)

சம்பவம் நடந்த தினமன்று இரவு திருகோணமலை ஆஸ்பத்திரிக்குச் சென்ற திருகோணமலை திடீர் மரண விசாரணை அதிகாரி எம். கே. செல்வராசா உடனுக்குடன் சடலங்களை அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்க பணிப்புரை வழங்கினார். (இ-3-150)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

2 ஆம் இடத்தையும் —

பிரிவு நான்கில் சிறுகதைப் போட்டியில் சி. ஆரபி (சுன்னாகம் ஸ்கந்தா) 2ஆம் இடத்தையும் —

திறந்த போட்டியான விவாதப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தா 3 ஆம் இடத்தையும் — பெற்றன (இ-3)

## வெற்றி உறுதி...

(முதலாம் பக்கத் தொடர்)

தலைப்பக்கமோ அல்லது நெடுங்கேணி ஊடாகச் செல்லும் 53 ஆவது படையணியின் வால்ப்பக்கமோ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இப்படி தாக்குதல் நடத்தும் பட்சத்தில் எதிர்த்தாக்குதல் நடத்த படைகள் தயார் நிலையில் உள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-150)

# குற்றவாளியை கண்டுபிடிக்குமாறு கூட்டணிக் கிளை கோரிக்கை

திருகோணமலை, ஜூலை 7

"திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரையின் கொலை தொடர்பாக விசாரணை நடத்தி, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்."

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி திருகோணமலைக் கிளை கோரியுள்ளது.

நேற்றுக்கூடிய கிளையின் விசேட கூட்டம் செ. ஈழத்துநாதன் தலைமையில் நடந்தது.

மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான இக்கூட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"பெறுமதிமிக்க உயிர்களை பறித்த இந்தச் செயலைக் கண்டிக்கிறோம். உண்மையான கொலையாளிகளை கண்டுபிடிக்க விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்" என்று அத்தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது.

அ. தங்கத்துரையின் இறுதிக்கிரியை ஏற்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டது. (இ-3-150)

## வாகனத்தி...

(முதலாம் பக்கத் தொடர்)

தேன்.

பிரதான வாசலில் நிறுத்தப்பட்டிருந்த அவரது வாகனத்தின் பின் ஆசனத்தில் நான் ஏற முற்பட்டேன்.

அச்சமயம் அவர் பே. சி. கணேசலிங்கத்தின் முதுகில் கையை வைத்து அணைத்து, அவரைக் கூட்டிக் கொண்டு பாடசாலை வாசலில்இருந்து வாகனத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அப்பகுதியில் நின்ற ஒருவர் கணேசலிங்கத்தைச் சுட்டிக் காட்டி 'அவர் யார்?' பாடசாலை ஆசிரியரா?' என்று என்னிடம் கேட்டார். நான் "அவர் பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்" — என்று பதிலளித்தேன்.

அந்தச் சமயத்தில் எம். பி. தங்கத்துரை வாகனத்தின் முன்பக்கக் கதவைத் திறந்து ஏறமுற்பட்டார். அவ்வேளை பாரிய குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டது. நான் வாகனத்தில் இருந்துபாய்ந்து ஓடி பாடசாலைக்குள் புகுந்தேன். குண்டு வெடிப்பை அடுத்து படபட எனவேட்டுச் சத்தங்களும் கேட்டன — என்றார். (இ-3-150)

## ஜப்பான் கவலை

ரோக்கியோ, ஜூலை 7

கம்போடியாவில் ஏற்பட்டுள்ள போரை நிறுத்த உதவுமாறு இரண்டாவது பிரதமர் ஹூன் சென்னிடம் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் கேட்டிருக்கின்றார்.

நொம்பென்னில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை குறித்து ஜப்பானிய அரசு கவலை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கம்போடியாவுக்கு அதிக உதவிகளை ஜப்பானிய அரசு அளித்து வருகிறது. (ஐ)

## மாற்று...

(முதலாம் பக்கத் தொடர்)

விட்டு வேறு கப்டன்களை நியமித்து கப்பல் சேவையை நடத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும் —

அந்த மாற்று ஏற்பாடு செய்யப்படும் பட்சத்தில் கப்பல் சேவையை மீள ஆரம்பிக்க முடியும் என்றும் — திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரிவு பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அவசரமாக திருகோணமலையில் இருந்து காங்கேசன் துறைக்கு ஒரு தடவையாவது சேவையை நடத்துமாறு இக் கப்பல்களின் கப்டன்களிடம் கோரப்பட்டுள்ளது.

எனினும் அதற்கு அவர்கள் மறுத்து விட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## திருமலை நகரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ரான பெ. சி. கணேசலிங்கம் ஆகியோரின் இறுதிக் கிரியைகள் இன்றும் —

கொழும்பு விவேகானந்த, வித்தியாலய ஆசிரியர் ஜீவரத்தினத்தின் இறுதிக் கிரியைகள் நாளையும் — நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தற்சமயம் தமிழகத்தில் தமது மனைவியின் சத்திர சிகிச்சைக்காகச் சென்றுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி உப-தலைவரும், திருகோணமலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ளமாட்டார் என திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன. (இ-3-150)


கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

குருக்கள் தேவை

எமது ஆலயத்திற்கு நித்திய நைமித்திய பூஜைகளைச் செய்வதற்கு குருக்கள் தேவை. சுயவிவரங்களுடன் விண்ணப்பித்தல் வேண்டும். தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும். சம்பள விவரங்கள் நேரில் பேசித் தீர்மானித்துக்கொள்ளப்படும். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:- செயலாளர், கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை, கொக்குவில்.

விண்ணப்பமுடிவுத் திகதி:- 16–07–1997

(47312) - ஆலய பரிபாலன சபை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்07-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org